விலை ரூபா: 5.00 பக்கங்கள்:-பத்து **Registered as a News paper in Sri Lanka**

# வலம்புரி
# VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 கார்த்திகை 10 செவ்வாய்க்கிழமை (26.11.2002) தொலைபேசி- 2223378 ஒலி 342

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது

ராம்கோ சிமெந்து

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT



கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்று இடம் பெற்ற மாவீரர் நாள் ஆரம்ப நிகழ்வுகள். மேலும் படங்கள் 7ம் பக்கம்.

# மாவீரர் நினைவு நாள் நேற்று உணர்வு பூர்வமாக ஆரம்பம்

## யாழ்.குடா நாடு எழுச்சிக் கோலம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மாவீரர் நாள் நிகழ்வுகள் நேற்று தமிழர் தாயகப் பிரதேசமெங்கும் மிகவும் உணர்வு பூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது.

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் எழுச்சி நிகழ்வு காலை 8.30மணிக்கு, தமிழீழத் தேசியக் கொடியேற்றுதலுடன் ஆரம்பமாகியது.

நிகழ்வில் பொதுச் சுடரினை மாவீரர் மதுஷாவின் தந்தையார் ச.இரத்தினசிங்கம், மாவீரர் வதனியின் தாயார் சுசிலா அன்னம்மா ஆகியோர் ஏற்றி வைக்க, தமிழீழ தேசியக் கொடியை யாழ்மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி ஏற்றினார்.

தொடர்ந்து பொது மக்கள் மற்றும் போராளிகள் மாவீரர்களுக்கு மலரஞ்சலி செலுத்தினர்.

மாவீரர் நினைவுரையை யாழ். மாவட்ட மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் தமிழ்விழி நிகழ்த்தினார்.

இதேவேளை தமிழர் தாயகப் பிரதேசமெங்கும் எழுச்சியுடன் அனுஷ்டிக்கப்படும் மாவீரர் நாள் நிகழ்வுகள் இம்முறை யாழ்.குடா நாட்டில் மிகவும் உணர்வுபூர்வமாக எழுச்சியுடன் அனுஷ்டிக்கப்படுகின்றது.

வீதிகள், சந்திகள் எங்கும் போராட்ட வரலாற்றைச் சித்திரிக்கும் அலங்கார வளைவுகள் நிறுத்தப்பட்டு, சிவப்பு, மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டுள்ளன.

மாவீரர் பந்தல்கள் வீதிகள், சந்திகளில் அமைக்கப்பட்டு அங்கு மாவீரர் திருவுருவப்படம் வைக்கப்பட்டுள்ளது.

மக்களை எழுச்சி கொள்ள வைக்கும் வகையில் வீதிகள் எங்கும் மின்னொளி பாய்ச்சப்பட்டுள்ளதுடன் ஒலி பெருக்கிகளும் எழுச்சி கீதங்களை இசைக்கின்றன.

இதேவேளை மாலை வேளையில் மக்கள் மாவீரர் துயிலும் இல்லங்களை நோக்கி செல்வதையும்அவதானிக்க முடிகின்றது.

(இ-6-7)



# சர்வதேசம் உதவாவிட்டால் சமாதானம் கனவாகிவிடும்

## ஒஸ்லோ மாநாட்டில் பிரதமர் ரணில் உரை

(ஒஸ்லோ)

**ஒஸ்லோ மாநாட்டில் பெற்றுக்கொள்ளப்படவுள்ள வெற்றியானது, சமாதான முயற்சிக்கு உறுதிப்பாட்டை வழங்கி அம் முயற்சியியை மேலும் முன்னோக்கிச் செல்லக் கூடியதாக இருக்கும். இதற்கான சர்வதேச ஒத்துழைப்புக் கிடைக்காது போனால், சமாதானம் தொடர்பான கருத்து கனவாகவே அமைந்து விடும். இவ்வாறு பிரதமர்**

சர்வதேச ஒத்துழைப்புக் கிடைக்காது போனால், சமாதானம் தொடர்பான கருத்து கனவாகவே அமைந்து விடும். இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்காஒஸ்லோ மாநாட்டு ஆரம்ப உரையின் போது தெரிவித்துள்ளார்.

நோர்வேயின தலைநகர் ஒஸ்லோவில் நேற்றுக் காலை 10மணிக்கு ஆரம்பமான இலங்கைக்கு உதவீ வழங்கும் நாடுகளின் மாநாட்டினை இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும், நோர்வேப் பிரதமர் செல்பேர்க்பிக்கும் ஆரம்பித்து வைத்து உரையாற்றினார்கள்

இம் மாநாட்டில் அமெரிக்கா, பிரிடடன் உட்பட 39 நாடுகள் பங்கு பற்றியிருந்தன. இம் மாநாட்டில் ஆரம்ப உரையாற்றும் போதே ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.

இம் மாநாட்டில் பிரதமர் ரணில் தொடர்ந்து உரையாற்றுகையில, கடந்த பதினெட்டு வருட காலமாக நாட்டில் இடம் பெற்ற யுத்தத்தினால் நாட்டின் அபிவிருத்தி வெகுவாகப் பாதித்துள்ளது. இத்தகைய பாதிப்பில் இருந்து

(2ம் பக்கம் பார்க்க)



ஒஸ்லோ மாநாட்டில்...

## அமைச்சர் ரவூப் ஹக்கீம் பாலாவுடன் ஒஸ்லோவில் பேச்சு

(ஒஸ்லோ)

கிழக்குமாகாண நிலைவரம் தொடர்பாக அமைச்சர் ரவூப் ஹக்கீம் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை நேற்று நோர்வேயின் தலைநகரில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

சுமார் ஒரு மணித்தியாலத்திற்கும் மேலாக இடம் பெற்ற இப் பேசசுவார்த்தையின் போது, கிழக்கு மாகா்ணத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் பொலிஸ் நிலையங்களையும

(10ம் பக்கம் பார்க்க)

## தலைவர் பிரபாவுக்கு இன்று அகவை 48



(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன். அவர்கள் இன்று 48 ஆவது அகவையில் காலடி எடுத்து வைக்கிறார். உலகத் தமிழ் மக்களின் உளம்கனிந்த

(10ம் பக்கம் பார்க்க)

### கிளிநொச்சியில் சாள்ஸ் சிறப்புப் படையணியின்

# மரபுவழி இராணுவத்தின் 1-வது மாவீரர் நினைவாலயம் நேற்று திறந்து வைப்பு

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப் போராடடத்தில் மரபுவழி யுத்தத்தில் ஈடுபட்டு வீரகாவியமான சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் முதலாவது மரபுவழி இராணுவத்தின் மாவீரர் நினைவாலயம் நேற்று முற்பகல 11.30மணிக்கு கிளிநொச்சியில் திறந்து வைக்கப்பட்டது.

மரபுவழி யுத்தத்தில் வீரகாவியமான 1054 மாவீரர்களின் நினைவாக அமைக்கப்பட்ட இவ் நினைவாலயத்தை விடுதலைப் புலிகளின் வட முனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

நிகழ்வில் பொதுச் சுடர் ஏற்றப்பட்டதைத் தொடர்ந்து,தமிழீழத் தேசியக் கொடியை சிறப்புப் படையணியின் சிறப்புத் தளபதி கேணல் சொர்ணம்

(10ம் பக்கம் பார்க்க)

### தமிழர்களின் அபிலாஷை நிறைவேற்றப்பட்டால்

# ஆயுதப் போராட்டத்தை கைவிட விடுதலைப் புலிகள் தயார்

### அன்ரன் பாலசிங்கம் தெரிவிப்பு

(ஒஸ்லோ)

தமிழ் பேசும் மக்களின் அபிலாஷைகளைத் தீர்த்து வைக்கக் கூடிய தீர்வுத் திட்டம் முன்வைக்கப்படுமானால்ஆயுதப் போராட்டத்தை விடுதலைப் புலிகள் கைவிடத் தயாராக இருப்பதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், அமெரிக்கப் பிரதி இராஜாங்க அமைச்சர் ஆம்டேஜ் விடுதலைப் புலிகள் தொடர்பாக தெரிவித்த கருத்தை அடுத்தே

(10ம் பக்கம் பார்க்க)

## சிறு விளம்பரம்

### வீடு தேவை

அலுவலகப் பாவனைக்கு யாழ் புற்றுநோய்- எயிட்ஸ் நோய்த் தடுப்புச் சங்கத்திற்குத்தேவைப்படுகின்றது யாழ் மாநகரசபை எல்லை அல்லது கொக்குவில் காங்கேசன்துறை வீதி அல்லது பலாலி வீதி கோண்டாவில் வரை விரும்பத்தக்கது தொடர்பு: 228 பிரதானவீதி, யாழ்ப்பாணம். T P 222- 2263.

(C/ 5354)


# புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் உள்ள மனோதர்மம் மதிக்கப்படவில்லை

## வணபிதா பேர்னாட் உரை

(தென்மராட்சி)

புரிந்துணர்வு ஒப்பந்தமானது நிரந்தரமான சமாதானத்துக்கான இயல்பு நிலையை ஏற்படுத்தும் அளவுகோலாக இருக்கிறது ஆயினும் புரிந்துணர்வு ஒப்பந்தத்திலுள்ள மனோதர்மம் மதிக்கப்படவில்லை.

இவ்வாறு யாழ் மாவட்ட கத்தோலிக்க தேவாலயத்தின் நீதிக்கும் சமாதானத்துக்குமான ஆணைக்குழுவின் தலைவரான வண பிதா ஏ ஐ பேர்னாட் பண்டத்தரிப்புதியான இல்லத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆய்வுப்பட்டறையில் அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் பொது மக்களின் நோக்கில் எனும் தலைப்பில் கருத்துரையாற்றும் போது குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்:-

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு சிலர் உரிய மதிப்புக் கொடுக்காமல் இருந்து வருகின்றனர் என அறியும் போது வேதனையாகவுள்ளது. புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் இங்குள்ள படைத்தரப்பினர் அச்சமின்றி இருக்கின்றனர். ஆனால் உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்கள் கௌரவமாக வாழ முடியாத நிலையிலுள்ளனர்.

ஏ-9 பாதை திறக்கப்பட்டமைத் தொடர்ந்து இடம்பெயர்ந்த மக்கள் வன்னியில் இருந்து பெருமளவில் வருகின்றனர். அவர்கள் தமது சொந்த வீடுகளுக்குச் சென்று தங்கியிருக்க முடியாத நிலையே காணப்படுகின்றது அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் நிமித்தம் இத்தகைய மக்கள் அகதி முகாம்களிலும் ஆலயங்களிலும் தங்கியுள்ளனர்

சர்வதேச மட்ட அகதிகளின் அந்தஸ்துடன் இவர்களது வாழ்க்கையை ஒப்பீடு செய்து பார்த்தால் இவர்கள் எவ்வளவோ தூரத்துக்கு அப்பால் மிகவும் மோசமாக இருக்கிறார்கள். இப்போது கொண்டுவரப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் யாருக்காக யார் யார் இதன் மூலம் நன்மையடைந்துள்ளனர். புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் தென்பகுதி மக்களே கூடுதலாகப் பயன் அடைந்துள்ளனர்.

இங்குள்ள மீனவர் விவசாயிகளின் வாழ்க்கைத் தரம்பற்றி நாம் கவனம் செலுத்த வேண்டும் விவசாயிகளிடம் செழிப்பான விளை நிலங்கள் இருக்கின்ற போதிலும் கூட அவை பயன்படுத்தப்படாத நிலையிலேயே இருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும் என்றார்.

யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை அங்கு பேசுகையில்:-

இலங்கையின் அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டவற்றினை அமுல் செய்யாமையே இங்கு நிலவுகின்ற அடிப்படைப் பிரச்சினையாகும். குறிப்பாக தமிழ் மொழி அமுலாக்கல் விடயம் இன்னமும் சரிவர அமுல் செய்யப்படவில்லை யாழ்ப்பாண குடாநாட்டிலுள்ள எந்தவொரு பொலிஸ் நிலையத்திலும் பொது மக்கள் தமது முறைப்பாடுகளை தமிழ் மொழியில் பதிவு செய்ய முடியாமல் உள்ளது இதனால் பொது மக்கள் பல பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளனர் இந்த விடயம் பற்றி நான் கடந்த ஆறு வருடங்களாகக் கூறி வருகின்றேன் ஆயினுங்கூட இந்த விடயம் உரிய கவனத்தை இன்னமும் ஈர்க்கவில்லை இதனைச் செய்தாலேயே எமது பிரச்சினைகளில் பாதி தீர்ந்த மாதிரியாகும் எனக் கூறினார்.

(பி.77)

### சர்வதேச ..

இருந்து நாட்டைக் கட்டி எழுப்ப சர்வதேசத்தின் ஒத்துழைப்பு அவசியமாகத் தேவைப்படுகிறது.

நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்பட வேண்டுமென்ற நோக்குடன் ஜனாதிபதி சந்திரிகா சமாதான முயற்சியை நோர்வேயின் மத்தியஸ்தத்துடன் முன்னெடுத்துச் செல்ல முற்பட்டபோதும், அத்தகைய சமாதான முயற்சி அப்போது மந்தகதியிலேயே இருந்தது. இந்நிலையில் கடந்த பொதுத் தேர்தலில் நாட்டில் சமாதானம் விரைவாகவும், முழுமையாகவும் மலர வேண்டும் என்ற நோக்குடன் மக்கள் ஐக்கிய தேசிய முன்னணியை ஆட்சிக்குக் கொண்டு வந்தார்கள்.

இச்சமாதானத்தை மேலும் வலுப்படுத்தும் வகையில் அடுத்து நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களிலும் மக்கள் பூரண ஆதரவை எமக்குத் தந்துள்ளார்கள். சமாதானத்திற்கான மக்கள் தந்தஆணையை நிறைவேற்றுவதிலேயே அரசு தற்போது கவனம் செலுத்தி வருகிறது.

கடந்த 18வருட காலமாக நாட்டில் இடம்பெற்று வந்த கொடிய யுத்தம் சகல இன மக்களையும் வெகுவாகப் பாதித்துள்ளது. இந்த யுத்தம் பொருளாதார வளர்ச்சியை நேரடியாகப் பாதித்துள்ளது. இந்த யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கிலேயே விடுதலைப் புலிகளுடன் யுத்த நிறுத்தம் செய்துபுரிந்துணர்வு உடன்படிக்கையை அரசுசெய்துள்ளது.

யுத்தநிறுத்தம் செய்யப்பட்டபின் நாடு படிப்படியாக சகஜ நிலைக்குத் திரும்பிக் கொண்டு வருகிறது. இது சகல இன மக்களுக்கும் மகிழ்ச்சியைக் கொடுத்துள்ளது. ஆயுதம் தொடர்பாக மக்களுக்கு இருந்த வெறுப்புணர்ச்சியை ஒப்பந்தம் போக்கியுள்ளது.

ஜனநாயகம் என்பது பல்லினம, பலதரப்பு, பல சமூக வியூகத்திற்குள் எமது தேசியத்தின் அனைத்து உறுப்பினர்களும் சமத்துவத்தை பெற்றிருக்கவேண்டும் மிகப் பெருமளவில் நம்பிக்கைவைத்து வைத்திருக்கக்கூடிய சமாதான முயற்சிகள் கூட தோல்வியடையலாம். ஆனால், இந்த உலகில் நீங்கள் அனைவரும் பங்காளர்களாகசெயற்படும் இச்சமாதான முயற்சி எதிர்பார்ப்பின் விளக்கொளியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை, இதனை தோல்வி அடையச் செய்ய எம்மால் முடியாது. அதற்கு இடம்கொடுக்கவும் கூடாது.

அரசின் சமாதான முயற்சியில் நோர்வேயின் பங்குமகத்தானது, நடுநிலையானது என்றும் பிரதமர் ரணில்விக்கிரமசிங்கா கூறினார். (ம)


## இராசி பலன்

26-11-2002
(கார்த்திகை 10, செவ்வாய்)
சஷ்டி மு ப 8 21வரை
ஆயிலியம் மு.இ 11-05வரை
இராகுகாலம் 3.12-4,42
நல்லநேரம் 10.42-12.12


**மேடம்**
கல்வியில்ஆர்வம், ரோக பயம், விரும்பாதோர் உறவு முயற்சி தாமதம்

**இடபம்**
கூட்டுமுயற்சி, தனவரவு, அன்னியர்சந்திப்பு, காரிய நன்மை

**மிதுனம்**
மாதர்நட்பு, கௌரவக் குறைவு, விவாதம், முயற்சி தாமதம்

**கடகம்**
போசனசுகம், பெரியோர் ஆசி, நல்லமுயற்சி, சயனசுகம்

**சிங்கம்**
காரியதாமதம், பிதாசிந்தை தனவிரயம், கோபப்படுதல்

**கன்னி**
மனமகிழ்ச்சி, பொறுமையடைதல், நண்பர்கள்சந்திப்பு முயற்சிகைகூடும்

**துலாம்**
அதிகாரம், செய்தொழில் மேன்மை, சுபநிகழ்வு, உற்சாகம்

**விருச்சிகம்**
கட்டுப்பாடு, புதியதிட்டமிடல், முயற்சிதாமதம், மனச்சஞ்சலம்

**தனுசு**
பெரியோரால் வெறுக்கப்படுதல், முயற்சிதாமதம், பிரயாணபயம், போசனசுகம்

**மகரம்**
நினைத்தகாரியம் கைகூடும் குடும்பசுகம், பொருள்சேர்க்கை, வாகனவசதி

**கும்பம்**
தனவரவு, உடல்நலம், சத்துருஜெயம், சுவாரஸ்யம்

**மீனம்**
வியாபாரச்சிறப்பு, விரும்பியஇடம் செல்வதில்தாமதம் உடல்நலக்குறைவு, மனச்சஞ்சலம்

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

# நெடுந்தீவில் பதற்றத்தை தணிக்க சகலதரப்பும் முன்வரவேண்டும்

## யாழ் - மன்னார் ஆயர்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கடந்த இருவாரங்களாக நெடுந்தீவுப் பிரதேசத்தில் நிலவும் பதற்றமான சூழ்நிலையைத் தணிப்பதற்கு அனைத்துத் தரப்பினரும் முன்வரவேண்டுமென யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகமும் மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப்பு கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுதொடர்பாக நேற்றுக் கூட்டறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

எமதுநாட்டில் சமாதானத்துக்கான சூழ் நிலைமலர்ந்து வரும் இவ்வேளையில் கிறிஸ்தவ மக்கள் அனைவரும் இறந்து போனவர்களைப் பற்றி நினைக்கும் நவம்பர் மாதத்தில் தமிழ்மக்கள் அனைவரும் சிறப்பாக எம் மண்ணின் மீட்புக்காக தம் உயிரைத் துறந்த அனைத்துதியாகிகளையும் நினைவு கூரும் நேரத்தில் எமதுதமிழ் மண்ணில் குறிப்பாக நெடுந்தீவுப் பிரதேசத்தில் ஏற்பட்டிருக்கும் அரசியல்பதற்ற நிலையால் நாம் கவலை அடைந்துள்ளோம்.

அரசியல் கட்சிகள் தம்கட்சி அரசியலை முன்னெடுக்கப் பல்வேறு இடங்களில் செயற்படுவதும் முயற்சிப்பதும் ஏற்றுக்கொள்ளப்பட்டதே எனினும் அவர்கள் எப்போதும் மக்களுடைய உணர்வுகளைக் கருத்தில் கொண்டு செயல்படவேண்டியது முக்கியமானதும் இயற்கையானதும் கூட.

முழுநாட்டின் நலனை மறந்து தனிஒரு கட்சியின் நலனை மட்டுமே நோக்காகக் கொண்டு உழைப்பது சமாதானத் தேடலுக்கு முரண்பாடானது என்பது மறுக்கப்பட முடியாத உண்மையாகும். எமது முழுநாட்டின் சமாதானத்தை கவனத்தில் கொள்ளாது நாம் செயல்படும் போது எமது நாட்டில் சமாதானத்தை வெறுக்கும்பேரினவாதிகளின் கைகளுக்குள் நாம் சிக்கிவிடுவோம் என்பதும் உண்மையாகும்.

எனவே இப்பேராபத்தில் இருந்து எம்மைக் காத்துக்கொள்ள தீவகத்தில்தோன்றியுள்ள முறுகல்நிலையைத் தணித்து அமைதிச்சூழலை ஏற்படுத்த அரசும், விடுதலைப்புலிகளும் ஈ.பி.டி.பி கட்சியினரும் அனைத்து சம்பந்தப்பட்ட மற்ற அரசியல் கட்சிகளும் மக்களும் ஒன்று சேர்ந்து ஒத்துழைக்க வேண்டுமென வெகு விநயமாக வேண்டுகிறோம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த)

## விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

இலங்கை நிருவாக சேவைக்கான விஞ்ஞான பொறியியல் பொலிஸ் மற்றும் கட்டடக் கலைஞர் சேவைகளுக்கான வினைத் திறமைகாண தடைப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பதவிகளுக்கான விண்ணப்பங்கள் யாவும் பரீட்சை ஆணையாளர் நாயகம், பரீட்சைத் திணைக்களம், பத்தரமுல்லை, பெலவத்தை என்னும் முகவரிக்கு 2002.12.26 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்குமாறும் கோரப்பட்டுள்ளது.

(பி-8)

# கட்டைவேலி -நெல்லியடி ப. நோ. கூ சங்கத்தில் மாவீரர் எழுச்சி நாள்

(யாழ்ப்பாணம்)

கட்டைவேலி - நெல்லியடி பல.நோ.கூ. சங்கத்தில் மாவீரர் எழுச்சிநாள் சங்கத் தலைவர் த. சிதம்பரப்பிள்ளை தலைமையில் கடந்த திங்கட்கிழமை உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் காலை 8 00 மணிக்கு பொதுச்சுடர் ஏற்றி வைக்கப்பட்டது. தேசியக் கொடியை இயக்குநர் வீ.நடராசா ஏற்றி வைத்தார். இதனைத்தொடர்ந்து மலர்வணக்கம் நினைவுரைஎன்பனஇடம் பெற்றன.

இந்நிகழ்வில் மாவீரர் நாளின் மகிமைபற்றிய நினைவுரைகளை சங்கத்தின் பொது முகாமையாளர் செ.கெங்காதரன் செயலாளர்பு: இராதாகிருஷ்ணன் கல்வி உத்தியோகஸ்தர் சாந்திமதிநாதன் முன்னாள் பொது முகாமையாளர்கார்த்திகேசு வர்த்தக முகாமையாளர் தணிகாசலபதி கிளை முகாமையாளர் மா. நடேசன் ஆகியோர் நிகழ்த்தினர்

(பி)

# மட்டு. மாவட்டத்தின் இவ்வருட அபிவிருத்திக்கு 76 கோடி ரூபா ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் அபிவிருத்திக்கென இவ்வருடம் 76 கோடி 36 இலட்சத்து 89 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்நிதியை பயன்படுத்தி மட்டக்களப்பு மாவட்டத்தில் 1850 திணைக்களங்கள் தமது அபிவிருத்தி பணிகளை முன்னெடுத்துச்செல்கின்றன.

இதற்கமைய பன்முகப்படுத்தப்பட்டவரவு - செலவுத்திட்டத்தின் கீழ் 325 வேலைகளுக்கு ஒரு கோடி 85 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாவும், பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை திட்டத்திற்கு 46 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாவும், மாகாண விசேட அபிவிருத்தி நன்கொடை திட்டத்துக்கு 8 கோடி 14 இலட்சத்து 21 ஆயிரம் ரூபாவும், ஒதுக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசின் அமைச்சுக்களினூடான திட்டங்களுக்கு 36 கோடி 33 இலட்சத்து 42 ஆயிரமும்,

புனரமைப்புத்திட்டத்தின் கீழ் 1 கோடி 54 இலட்சத்து 56 ஆயிரம் ரூபாவும். டேபா திட்டத்துக்கு 2 கோடி 63 இலட்சத்து 6 ஆயிரமும், சமுர்த்தி திட்டத்துக்கு 17 இலட்சத்து 33 ஆயிரம் ரூபாவும், வடகிழக்கு மாகாண நீர்ப்பாசன, விவசாயத்திட்டத்துக்கு 9 கோடி 22 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவுமே இவ்வருடத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

(பி-8)

# காஷ்மீரில் இரு இந்து ஆலயங்களில் தீவிரவாதிகள் குண்டு தாக்குதல்

## மொத்தம் 12 பேர் பலி; 45 பேர் காயம்

(ஜம்மு)

இந்தியாவின் காஷ்மீர் மாநிலத்தில் இஸ்லாமியத் தீவிரவாத சந்தேக நபர்கள் 2 பேர் இந்து ஆலயம் ஒன்றின் மீது தாக்குதல் நடத்தியதில் 12 பேர் பலியானார்கள் 45 பேர் காயமடைந்தனர்.

ஜம்முவில் உள்ள 150 வருடம் பழமை வாய்ந்த ரகுநாத் கோவில் வளாகம் தாக்குதலுக்குள்ளானது. இத்தாக்குதல் நடந்து சில மணித்தியாலயங்களின் பின் அதற்கு 200 மீற்றர் தூரத்தில் உள்ள மற்றுமொரு ஆலயமும் தாக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினமிரவு தாக்குதல் இடம்பெற்ற போது 5 பொதுமக்களும் ஒரு பாதுகாப்பு அதிகாரியும் பலியானார்கள்.

2 வது தாக்குதலில் மேலும் ஒரு அதிகாரி பலியானதுடன், படுகாயமடைந்த பொதுமக்கள் 3 பேர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்ததாகவும் பொலிஸார் கூறினர்.

இரு தாக்குதல் சம்பவங்களிலும் சுமார் 45 பேர் படுகாயமடைந்துள்ளதாகத் தெரிகின்றது.

அத்துடன், தாக்குதல் நடத்திய தீவிரவாதி பெயிறாவர் கொல்லப்பட்டதாகவும் சம்பவத்தின் பின் ஜம்முவில் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டதாகவும் பொலிஸார் மேலும் கூறியுள்ளனர். (பி-4)

## பாபா ஆலய குண்டுவெடிப்பு சூத்திரதாரி கொலை

(புதுடில்லி)

ஹைதராபாத்தில் சுந்நகரிலுள்ள சாயிபாபா ஆலயத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தின் சூத்திரதாரியை பொலிஸார் சுட்டுக்கொன்றுள்ளனர்.

பாகிஸ்தானை மையமாகக் கொண்டு இயங்கும் லக்ஷறி தொய்யா இயக்கத்தின் உறுப்பினரான முகமட் அசாம் என்பவரையே பொலிஸார் சுட்டுக் கொன்றுள்ளனர்.

பாபாவின் ஆலயத்திற்கு மோட்டார்சயிகிளில் சென்றே குண்டை வெடிக்கச்செய்ததாக விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது

கடந்த வியாழக்கிழமை இடம் பெற்ற இக்குண்டு வெடிப்பு சம்பவத்தின்போது, இருவர் கொல்லப்பட்டதுடன், 2 பக்தர்கள் படுகாயமடைந்தனர் என்பதும் தெரிந்ததே. (8)

## பாலித்தீவு குண்டு வெடிப்பு சந்தேக நபர் ஒப்புதல்

(ஜகார்த்தா)

இந்தோனேஷியப் பாலித் தீவுக் குண்டு வெடிப்பு சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட சந்தேக நபர் சம்பவத்தில் ஈடுபட்டதாக ஒப்புக் கொண்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட இமாம் ஷமுக்ரா என்பவர் பாலித் தீவிலிருந்து சமத்ரா தீவிற்குச் செல்வதற்காக படகொன்றில் ஏறும் போது கடந்த வியாழக்கிழமை கைதானார்.

இவர் பாலித்தீவில் வாடகைக்கு அமர்ந்திருந்த வீட்டில் இருந்து ஒஸமாபின் லேடனின் பேச்சுக்களும், விரிவுரைகளும் பதிவு செய்யப்பட்ட ஒலிப்பேழைகள் நிறைந்த 02 பெட்டிகளும், பல புத்தகங்களும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் கூறுகின்றனர்.

கடந்த மாதம் 12 ஆம் திகதி இந்தோனேஷியப் பாலித் தீவில் இடம் பெற்ற பயங்கரவாதக் குண்டுத்தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் 07 பேர் இது வரையும் கைது செய்யப்பட்டுள்ளதாக பாலித் தீவுப் பொலிஸார் தெரிவித்தனர். (பி-4)

## ஐ.நாவுக்கு ஈராக் கடிதம் மக்களைப் பாதுகாக்கவே தீர்மானத்தை ஏற்றோம்

(பக்தாத்)

ஈராக்கில் 4 வருடங்களின் பின் மீண்டும் இடம் பெறும் ஆயுதப் பரிசோதனைகள் தொடர்பான ஐ.நாவின் தீர்மானத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்துஐக்கியநாடுகள்சபைக்கு அந்நாடு கடிதம் ஒன்றை வரைந்துள்ளது.

ஈராக்கிய வெளிவிவகார அமைச்சர் நாஜிஸப்ரிஐ நா. சபையின் செயலாளர் நாயகம் கோபி அனானுக்கு இக்கடிதத்தைநேற்றுஎழுதியுள்ளார்.

யுத்தத்திலிருந்து தனது மக்களைப் பாதுகாக்கவே ஐ நா. சபையின் தீர்மானங்களைஏற்றுக் கொண்டுள்ளதாவும், ஈராக்மீது தாக்குதல் நடத்த அமெரிக்காவிற்கு வாய்ப்பு அளிக்கப்படும் வகையில் இத் தீர்மானம் அமைந்துள்ளதாகவும் அந்தக் கடிதத்தில் அவர் தெரிவித்தார்.

ஐ நாவின் தீர்மானத்தின் படி ஈராக் தனது ஆயுதத்திட்டங்கள் தொடர்பாக முழுமையான அறிக்கையைஎதிர்வரும் டிசம்பர் 08 ஆம் திகதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும். அதனை அடுத்து ஆரம்பமாகும் ஆயுத பரிசோதனைகள் தொடர்பாகமுதலாவது அறிக்கையை ஆயுதப்பரிசோதகர்கள் எதிர்வரும் ஜனவரி 27 ஆம் திகதிக்குள் ஐ நா. வின் பாதுகாப்புப் பேரவைக்குக் கையளிக்க வேண்டும். (பி-4)

## அரச படைகளால் நேபாளத்தில் 50 'மாவோ' வாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்

(புதுடில்லி)

நேபாளத்தின் ராம்யுன் மாவட்டத்தில் பாதுகாப்பு படையினர் மேற்கொண்ட தேடுதல் மற்றும் தாக்குதல் நடவடிக்கையின் போது 50 மாவோ தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்த தாக்குதலின் போது கொல்லப்பட்டவர்களில் ராம்யுன் மாவட்ட மாவோத் தீவிரவாதிகளின் தலைவரும் ஒருவர் என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவித்தன.

மேலும் அந்தப் பகுதியில் இருந்து பெருமளவுக்கு ஆயுதங்களும் வெடிமருந்துப் பொருட்களும் கைப்பற்றப் பட்டுள்ளன.

இதேவேளை கடந்த சில தினங்களுக்கு முன்னர்நேபாள ராம்யுன் பகுதி மாவோத் தீவிரவாதிகளால் கைது செய்யப்பட்ட 15 பொலிஸார் விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (பி-02)

## தாய்வானில் அமைச்சர்கள் இருவர் ராஜினாமா

(தைபீ)

தாய்வானின் நிதியமைச்சரும், விவசாய அமைச்சரும் தமது பதவிகளை ராஜினாமா செய்துள்ளனர்.

பண்ணைகளுக்கான கடன் வழங்கும் சீர்திருத்தத்திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து 1 இலட்சத்திற்கு மதிகமான விவசாயிகள் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் செய்த மறு நாள் இவர்கள் சமர்ப்பித்த ராஜினாமாக் கடிதங்களைபிரதமர் யூஎசக்சோ ஏற்றுக் கொண்டுள்ளார்.

விவசாயக் கடன் தொடர்பாக அரச கட்டுப்பாட்டுக் கொள்கையில் மாற்றம் கொண்டு வரப்பட்டதை எதிர்த்து பிரதமர் இருநாட்களுக்கு முன் ராஜினாமா செய்ய இருந்ததும் ஜனாதிபதி செஞ் சுல் மீஷாவின் வேண்டுகோளின் பேரில் தொடர்ந்து பதவியிலிருக்க இணங்கியிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (பி-4)

## அழகிப் போட்டி கலவரத்தில் இறந்தோர் எண்ணிக்கை 200 பேருக்கும் அதிகம்

(அபுஜா)

நைஜீரியாவில் நடைபெறவிருந்த உலக அழகிப் போட்டியை எதிர்த்து கடந்த மூன்று தினங்களாக முஸ்லிம்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் இடையில் நடந்துவந்த கலவரத்தில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 215 ஐ தாண்டிவிட்டது, என நைஜீரிய செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவர் அதிகாரபூர்வமாகத் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பித்த இந்தக்கலவரத்தில் அன்றயதினம் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 50 ஆகவே காணப்பட்டது.

இது தற்போது தெருக்கள், மருத்துவமனையின் சடலக் காப்பறைகள், மற்றும் உறவினர்களால் அடக்கம் செய்யப்பட்ட சடலங்களை வைத்துக் கணக்கிட்ட போது, 215 பேரைத் தாண்டியுள்ளது.

அத்துடன் நேற்றிரவும் கடும் மோதல்கள் அங்கு இடம் பெற்று 11 000பேர்வீடுகளை விட்டு விரட்டியடிக்கப்பட்டுள்ளனர். என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தங்கள் நாட்டின் தோற்றத்திற்கு வசீகரத்தை ஏற்படுத்துமென எதிர்பார்க்கப்பட்ட உலக அழகிப் போட்டி மாறாக மதப்பிளவுகளையும் பாரிய உயிரிழப்புக்களையும் ஏற்படுத்திவிடுமென சற்றுக்கூட எதிர்பார்க்கவில்லை என நைஜீரிய பிரதமரின் மனைவியும் சுற்றுலாத் துறைத் தலைவருமான ஸ்ரெலா பெரும் கவலையைத் தெரிவித்துள்ளார்.

இந்தப் பாரிய கிளர்ச்சிக்கு நைஜீரிய நாளிதழ் ஒன்றில் வெளியான சர்ச்சைக்குரிய கட்டுரைதான் முக்கிய காரணம் எனவும் இதனை வெளியிட்ட பத்திரிகை நிறுவனம் மீது பாரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஸ்ரெலா நைஜீரிய அதிபருக்கு கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட கட்டுரையினை வெளியிடக் காரணமான ஒருவரை நைஜீரிய பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இதேவேளைடிசம்பர் 7ஆம் திகதி நைஜீரியாவில் நடைபெறவிருந்த உலக அழகிப் போட்டியில் கலந்துகொள்வதற்காக அங்கு வந்திருந்த பல நாட்டுஅழகிகளையும் கமரூன் நாட்டு விமானமூலம் லண்டனுக்கு பாதுகாப்பாக நைஜீரிய அதிபர் அனுப்பிவைத்துள்ளமையும் இந்தப் போட்டி டிசம்பர் 7 ஆம் திகதி லண்டனில் நடைபெறும் என்பதும் முன்னர் தெரிந்த விடயமே (பி-2)

## ஈக்குவடோர் புதிய ஜனாதிபதி

(ஈக்விடோ)

ஈக்குவடோரில்நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் இராணுவத் தளபதி கேணல் லூஜியோ ஹீற்றஸ் அமோகி வெற்றியீட்டியுள்ளார்.

97சதவீத வாக்குகள் எண்ணப்பட்ட நிலையில்,54 சதவீத வாக்குகளைப் பெற்று அவர் முன்னணி வகிக்கின்றார். இவரைஎதிர்த்துப்போட்டியிட்ட வர்த்தகர் அல்வாரோ நொஹோபா 45சதவீத வாக்குகளை பெற்றுள்ளார்.

புதிதாகத்தெரிவு செய்யப்படும ஜனாதிபதி செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையில்;

தேசிய ஒற்றுமையைப்பிரதிபலிக்கும் வகையில் அரசாங்கம் அமைக்கப்படும் என்றும்,

நீதியாக நடந்து கொள்ளும் வர்த்தகர்கள், வங்கியாளர்கள், சமூக நடவடிக்கையாளர்கள் ஆகியோர் அரசாங்கத்தில் அங்கம் வகிப்பார்கள் என்றும் கூறினார். (பி-4)

## ஈராக் நிலைகள்மீது மீண்டும் விமானத்தாக்குதல்

(நியூஜோர்க்)

மேற்குநாட்டுவிமானங்கள் ஈராக்கின் தெற்கு எல்லைக் கோட்டுப்பகுதியிலுள்ள இராணுவத் தளங்கள்மீது தாக்குதல்களை நேற்றுமுன்தினம் மீண்டும் நடத்தியுள்ளன.

ஈராக்கில் பேரழிவைத் தரும் பாரிய ஆயுதங்கள் இருக்கின்றனவா என்பதைக்கண்டு பிடிப்பதற்காக எதிர்வரும் புதன்கிழமை பணிகளை ஆரம்பிக்கவிருக்கும் 18 பரிசோதகர்கள்கொண்ட ஐ.நா. ஆயுத பரிசோதகர்குழு இன்று பக்தாத் செல்கின்றது.

இவர்கள் பயன்படுத்தவிருக்கும் உபகரணங்கள்ஏற்கனவே ஐக்கியநாடுகள் விமானமூலம் பக்தாத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேன் பேரழிவைத்தரும் ஆயுதங்களை வைத்திருக்கின்றாரா என்ற சந்தேகத்தைத் தெளிவுபடுத்துவதற்கு ஐ நா. வின் பரிசோதனைகள் அவசியம்என்று பாரிஸில் பிரான்ஸ் ஜனாதிபதி ஜக்ஷிராத் தெரிவித்தார்.

யுத்தம்குறித்து எவரும் அவசரப்படவேண்டிய அவசியமில்லையென்று செய்தியாளர் மாநாடொன்றில் அவர் மேலும் தெரிவித்தார்.

பக்தாத்திலிருந்து 265 கிலோமீற்றர் தென்கிழக்குப் பிரதேசத்தில் அமைந்துள்ள அல்-அமரா என்ற இடத்திலுள்ள நடமாடும் ராடர்மீது மேற்குநாட்டு விமானங்கள் குண்டுவீச்சு நடத்தியதாக வாஷிங்டன் இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதற்கிடையில் ஜனாதிபதி சதாம் ஹுசேன் பதவியிலிருந்து கவிழ்க்கப்பட்டால் ரஷ்யப் பொருளாதார நலன்கள் பாதுகாக்கப்படும் என்று அமெரிக்காஉறுதிகூறியுள்ளது

எனவே ரஷ்யா ஈராக் தொடர்பாகக் கவலை கொள்ள வேண்டியதில்லையென்று அமெரிக்கா மேலும் தெரிவித்தது;

அமெரிக்காவின் ஈராக் தொடர்பான கொள்கைக்கு அந்நாடு ரஷ்யாவின் ஆதரவைக்கோரி வருகின்றதென்பது இங்கு சுட்டிக்காட்டப்படுகின்றது;

ஈராக்கில் புதிய தலைமைத்துவ பதவிக்குவரும்பட்சத்தில் ரஷ்யா தொடர்ந்தும் எண்ணெய் வர்த்தகத்தை மேற்கொள்ள முடியுமென்று அமெரிக்க அதிகாரிகள் தனிப்பட்டமுறையில் ரஷ்யாவிற்கு உறுதிமொழிகளை கூறிவருகிறார்களென்றும் கூறப்படுகின்றது (பி-4)

## உரிமைப் பிரச்சினை

(கொழும்பு)

நிதியமைச்சர் கே. என். சொக்ஸியைப்பற்றி திஸ்ஸ தெய்வேந்திர சம்பளஆணைக் குழுவின் தலைவர் பத்திரிகைக்கு விடுத்த அறிக்கை தொடர்பாக விசாரணை நடத்த வேண்டுமெனபொதுக் குழுவின் தலைவர் அன்திரா கெனடி நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் நடைபெற்ற பொதுஜன ஐக்கியமுன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே உரிமைப்பிரச்சினை தொடர்பாக கேள்விஎழுப்பிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அமைச்சர் அல்லது பாராளுமன்ற உறுப்பினர்ஒருவரின் உரைதொடர்பாக வெளியார் ஒருவர் சவால்விடுக்க முடியாதுஎனக்கூறி இந்தஉரிமைப் பிரச்சினையை எழுப்பியிருந்தார். (பி-10)

# தலைவன் பிறக்கின்றான் உருவாக்கப்படுவதில்லை

''ஒருதலைவன் பிறக்கின்றா னேயன்றி உருவாக்கப்படுவதில்லை'' இக்கூற்று முற்றிலும் உண்மை என்பதை உறுதிப்படுத்துகின்ற முறையிற்தான் திரு.வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களுடைய தோற்றம் அமைகிறது. அவர் தன் வாழ்வில் ஈட்டியுள்ள வெற்றிகளை நாம் மதிப்பீடு செய்யின் அவர் மாபெரும் படைத்தளபதி மட்டுமல்ல அவர் மாபெரும் நெருக்கடிமிக்க அரசியலிலும் சுழியோடி வெற்றிபெறும ஆற்றல் வாய்ந்தவர்



என்பதை அவர் உலகிற்கு உணர்த்தியுள்ளார். எனவேதான் அனைத்துத் தமிழ் மக்களும் அவரைத் தம் த லவர் என்று ஒரே உள்ளத்துடன் ஏற்றுள்ளனா. அவரிடம காணப்படும் படைத்திறன் கண்டு உலகம் வியக்கிறது. இப் படைத்திறனோடு ஈடுகொடுக்கின்ற முறையில் அவரிடம அரசியல் நுண்மான் நுழைபுலம் உண்டு. அவரிடம் உள்ள அரசியல் தொலைநோக்குச் சிந்தனை, ஆழ்ந்த உள்ளுணர்வு, அரசியல் அறிஞர்களை வியக்கச் செய்துள்ளது. பெரும் அரசியற் தலைவர்கள் எல்லாம இலங்கையில் எழுந்துள்ள இனச்சிக்கலைத் தீர்க்க எடுத்த முயற்சிகள் தோல்வியுற்ற நிலையில், இவர் கையாளும் வழிமுறைதான் எம்மை வெற்றிப் பாதையில் அழைத்துச் செல்லும் வழிமுறையாக விளங்குகின்றது.

அனைத்து ஆற்றலும் வாய்ந்த திரு.வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் தனது 17ஆவது வயதினில், ஆயுதம் தாங்கிப் போராடித்தான் சிங்கள வல்லாண்மையை முறியடிக்க முடியும் என்ற முடிவுக்கு வந்து- 1971லேயே குறுகியவட்ட இளைஞர் களுடன் போர்ப்பயிற்சியில் இறங்கிய மைக்குச் சான்று பல உண்டு. ''ஜே.ஆர் ஜயவர்த்தனா புத்தமதத்தை முறையாகக் கடைபபிடித்திருந்தால் நான் ஆயுதம் தாங்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்காது'' என்று பல ஆண்டுகளுக்கு முன் திரு.பிரபாகரன் கூறிய கூற்று பொருள பொதிந்தவையாகும். எந்நிலையிலும் சிங்கள மக்களிடமோ அல்லது ஆட்சியாளாிடமோ மன மாற்றம் காண முடியாது என்ற நிலையில் தான் ஆயுதம் தாங்கினார் என்பதை உணரமறுக்கின்ற நிலையில தமிழீழம் கேட்பதற்கு எமக்கு வரலாற்றுச்சான்றுகள் உண்டு. இருந்ததை, இழந்ததை மீண்டும் நிலைநாட்டும் முறையில்தான் தமிழீழக் கோட்பாடு அமைகிறது. ஆனால் வரலாற்றுச் சான்றுகளை மிஞ்சுகின்ற முறையிற் தள்ளப்பட்ட நிலையில்தான் தமிழீழம், தமிழீழக் கோரிக்கை எழுந்துள்ளது. நீண்ட காலம் அரசியல் அதிகாரத்தை அனுபவித்த ஆட்சிக்கு வந்த சிங்கள அரசுகள் தம் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ள மறுத்தனர். உண்மையான மக்களாட்சி அதிகாரம் பகிர்ந்து கொள வதில்தான் மலரமுடியுமென்பதை ஏற்க மறுத்தனர்.

தலைவர் பிரபாகரன் அவர்கள் எம் உட்பகையை ஒழித்துக்கட்டுவதில அக்கறை செலுத்துவது எம் ஆழ்ந்த கவனத்திற்குரியது. எம் விடுதலைப் போராட்டத்தில் ஏறக்குறைய 67,000 பொதுமக்களை இழந்துள்ளோம். வேளையில் தம் உயிரைத் துச்சமென மதித்துப் போராடிய 17,000 மாவீரர் களையும் நாம் இழந்துள்ளோம். இந் நெருக்கடியான சூழ்நிலையில் கூட தமிழினத்தைக் காட்டிக் கொடுக்கும் வஞ்சகக் கூட்டம் அங்கும், இங்கும் தலைதூக்கி இருப்பது எம் தலைவரை வாட்டி வதைக்கும் நிகழ்ச்சியாகும்.

## 3ஆம் நாட்டின் தலையீடு வரவேற்கத்தக்கது.

எனினும் காலம் கடந்த நிலையிலாவது சிங்களப் பேரினவாதத்திற்கு இரையாக விளங்கிய சிங்களத் தலைவர்கள் சிலர் உண்மையைஉணர்ந்து தமிழினம் ஒருமித்து ஏற்கின்ற தலைவன் பிரபா என்பதையும் தமிழினத்தின் ஒரே விடுதலை இயக்கம் தமிழீழ விடுதலைப் புலிகள் என்பதையும் உணர்ந்து அவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத துவதற்கு ஆட்சியில் அமர்ந்துள்ள ஐக்கிய தேசியக் கூட்டமைப்பின் தலைவராகவும் நாட்டின் தலைமை அமைச்சராகவும் விளங்கும் ரணில் விக்கிரமசிங்க முன்வந்து இருப்பது வரவேற்கத்தக்கது. ஈழத் தமிழர்கள் எதிர்நோக்கும் சிக்கலைப் பிரபாகரன் தலைமையில் இயங்கும் விடுதலைப் புலிகளதான் தீர்க்க முடியும் எல்பதை உணர்ந்துள்ள சிங்கள அரசு தாய்லாந்துப் பேச்சுவார்த்தைகளைத் தொடங்கியுளளது. ஈழத்தமிழரின் சிக்கலினை



தமிழீழ வரலாற்றில் முதன்மை பெறும் நிகழ்ச்சியாக தேசியத்தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரனின் 48ஆவது பிறந்தநாள் தமிழ் கூறும் நல்லுலகம் எங்கும் (26.11.2002ல்) இன்று கொண்டாடப்படுகிறது.

வெளிப்படையாக- நன்நோக்கத்தோடு தீர்க்கும் எண்ணத்தோடு 3ஆம் நாடாகிய நோர்வே ஈடுபட்டிருப்பது எமக்குப் பெரும் ஆறுதல் அளிக்கும் நிகழ்ச சியாகும். நோர்வே நாட்டினை இதில் ஈடுபடுத்துவதில் திரு.பிரபாகரனும அவருக்குப் பக்கத்துணையாக இருக்கும் அன்ரன் பாலசிங்கமும் ஆற்றிவரும் பணிகள் அளவிடற்கரியது. 3ஆம் நாட்டின் வெளிப்படையான தலையீடு தான் சிங்கள அரசு எம்மை ஏமாற்ற முனைந்தாலும் அவ் ஏமாற்ற முயற்சியைத் தடுக்கும் முறையில் அமைந்துள்ளது.

## புலிகளை மூத்த தமிழ்க்கட்சியும் ஏற்கிறது.

தமிழரிடையே இயங்கும் மூத்த தமிழ்க் கட்சியாகிய தமிழர் விடுதலைக் கூட்டணி ஈழத்தமிழ் மக்களின் ஒருமித்த உள்ளத்தை எதிர்ஒலிப்பவர்கள் தமிழீழ விடுதலைப்புலிகள் என ஒத்துக கொண்டு அவர்களுக்கு முழு ஆதரவு தர முன்வந்திருப்பது வரவேற்கத்தக்கது.

## ஒரு திருப்புமுனை

சென்ற ஆண்டு மார்கழியில் நடைபெற்ற தேர்தலும் தமிழன் வரலாற்றில் ஓர் திருப்புமுனை என்றே கொள்ள வேண்டும். இன்று நாடாளுமன்றத்தில் இயங்கும் தமிழர் விடுதலை கூட்டமைப்பு தமிழீழ விடுதலைப் புலிகளின் கடடுப்பாட்டில் அவர்களின் கருவியாகவே இயங்குகிறது. ஓர் நாடாளு மன்றக்குழு போர்க்களத்தில் நிற்கும் ஓர் இயக்கத்திற்குக் கட்டுப்பட்டு, இயங்கும், புதிய வரலாறு இப்போது படைக கப்பட்டுள்ளது. இதையும் உருவாக்கியவர் தலைவர் வே.பிரபாகரனே.

## குழப்பம் உண்டா?

எம்தலைவர் பிரபாகரனும், தமிழீழ விடுதலைப்புலிகளும், தம்கொள்கையைக் கைவிட்டுவிட்டார்கள் என்று தமது தேவைக்காக சில சிங்களவர் புலம்புகின்றனர். அவர்களுக்குத் துணைபோகின்ற சிலரும் இத்தகைய புலம்பலை எடுத்துக்காட்டுகின்றனர். 1984இல் திமபுவில தமிழீழ விடுதலைப்புலிகள் எடுத்த முடிவு எமக்குத் தெம்புதரும் முடிவென்பதை நாம் மறக்கவே முடியாது. தமிழர் ஓர் தேசிய இனம். தமிழருடைய தாயகக்கோட்பாடு ஏற்றுக் கொள்ளபபட வேண்டும். தமிழருக்குத் தன்னுரிமை, நிலைநாட்டும் உரிமை (சுயநிர்ணயக கோட்பாடு) வழங்கப்படவேண்டும். அத்தோடு இன்றைய நெருக்கடியான சூழலில் தமிழீழக் கோரிக்கையை வலியுறுத்துவதற்கு வாய்ப்பற்ற நிலையில் பொருள் பொதிந்த இணைப் பாட்சி மாற்றுத்திட்டம் அமைக்கப்பட வேண்டும் என்பதில் பிரபாகரனின் தலைமையில் உள்ள விடுதலைப் புலிகள் உறுதியாக இருக்கின்றார்கள். பல்மொழி பேசி, பல்மதம் தழுவி, பலலினம் வாழும் ஒரு நாட்டில் ஒற்றையாட்சி உதவாது அது காலப்போக்கில் தமிழினத்தின் அழிவிற்கே வழிவகுக்கும் வகையில் அமையும் என்பதில் பிரபாகரனுக்கு உள்ள தெளிவு வேறு எவருக்கும் உண்டோ என்பதில் ஐயம் உண்டா?

## ஆவது அறியும் பிரபா

நான் தமிழகத்தில் தங்கி இருந்த காலத்தில் இந்திராகாந்தி, வி.பி.சிங், பார்த்தசாரதி, திரு.கே.பி.எஸ் மேனன், கலைஞர் கருணாநிதி மற்றும் ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகம், சென்னை பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், மதுரைகாமராஜ் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் அரசியற் தலைமைப்பீடங்களுடன் உரையாடிய போது பிரபாகரன் அவர்களுக்கு இருக்கின்ற தொலை நோக்குச் சிந்தனை 'ஆவது அறியும கோட்பாடு' வேறு எவரிடமும் இருப்பதாக நான் காணவில்லை என்று கூறிய போது என் கூற்றில் உண்மை உண்டு எனபதினை அவர்கள் ஒத்துக்கொண்டனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## ஆனையிறவுத் தாக்குதல்

எனினும திரு.பிரபாகரன் அவர்களுடைய 48ஆவது பிறந்தநாளை இன்று நாம் கொண்டாடுகின்ற வேளையில் தாய்லாந்தில் நடைபெறுகின்ற பேச்சு வார்த்தைகளைக் குறிப்பிடுவது அவசியம். பிரபாகரன் தலைமையில் விடுதலைப் புலிகள் நடாத்திய அண்மைக் காலப் போர் வெற்றிகளையும் ஆனையிறவுத் தாக்குதலையும் நாம் எளிதில் மறப்பதிற்கிலலை. இனிமேல் சிங்களப் படை எம் தமிழ் மண்மீது தொடர்ந்து காலூன்ற முடியாது என்பதை உணர்த்தும்முறையில் அமைந்துள்ள ஆனையிறவுத் தாக்குதல் வெற்றிபெற திருபிரபாகரனும் அவருடைய போக்குமுழவும் தீட்டிய திட்டங்கள் வரலாற்றில் கட்டாயம் பதிக்கப்படும்.

## கட்டுநாயக்கா தாக்குதல்

இதனை அடுத்து பிரபாகரனுடைய நுண்மான் நுழைபுலத்துடன் கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் நடத்திய தாக்குதல் இந்நாட்டின் அரசை அதிரச் செய்தது. உலகின் கவனத்தை எம்பால் முழுமையாக ஈர்ந்தது. உயிர்ச்சேதம் மிகக்குறைந்த நிலையில் ஈட்டப்பட்ட இந்த மாபெரும் வெற்றி உலகில் இது வரை நடைபெறாத நிகழ்ச்சியாகும். நாட்டின் பொருளாதாரம முற்றாக வீழ்ச்சியுற நாடு தலை தூக்க முடியாநிலை ஏற்பட்டது. இதன்பின்பு தான் சிங்கள தலைவர்களும் குறிப்பாகச் சிங்கள வணிகர்களும் பிரபாகரனுடன் பேச்சுவார்த்தை நடாத்தியிருந்தால் இனச்சிக்கலைத் தீர்க்க முடியும என்ற முடிவிற்கு வந்தனர்.



இப்போது நடைபெற்றுவரும் பேச்சு வார்த்தை வெற்றியில் முடியுமா? தோல்வியில் முடியுமா? என்பதைக் காலம் தான் தீர்க்கப்போகிறது. ஆனால் புலிகளைப் புறக்கணித்து எதுவும செய்ய முடியாது என்ற நிலையை உருவாக்கியது கட்டுநாயக்க வானூர்தி தாக்குதல் என்பதை எவராலும் மறப்பதற்கில்லை. சில ஆண்டுகளுக்கு முன்பு இலங்கையின் நிதிக்களஞ் சியமாகவும், நாட்டின் நாணயக் கொள்கையை வகுக்கின்ற வங்கியாகவும் விளங்கும இலங்கை மத்திய வங்கியின் மீது நடத்தப்பட்ட தாக்குதலும் சிங்களத் தலைவர்களை கண்விழிக்கச் செய்தது. இத் தாக்குதலுக்கும் பிரபாகரனின் மூளை மிகச் சிறப்பாகச் செயற்பட்டதை நாம் மறுப்பதற்கில்லை.

## அழைப்பும் சந்திப்பும்

1979 பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் 3மாதங்கள் நான் யாழ்ப்பாண சிறையில் அடைக்கப்பட்டிருந்தேன். 2மாதங்கள் யாழ்ப்பாண இராணுவ முகாமிலும், ஒரு மாதம் யாழ்ப்பாண ஒல்லாந்தர் கோட்டையிலும் அடைக்கப் பட்டிருந்தேன். எனினும் 3மாத முடிவில் நீ பயங்கரவாதி இல்லை எனக்கூறி என்னை விடுவித்தனர். நான் பயங்கரவாதி இல்லை என்பதை உணர உங்களுக்கு 3மாதம் பிடித்ததா? என்று நான் கேள்வி கேட்டதில்லை. இராணுவ தலைமைப்பீடம் புன்முறுவல் பூக்க நான் வெளியில் வந்தேன். இச்சிறை மீண்டதையடுத்து என்னையும் கோவை மகேசனையும் சந்திக்க திரு பிரபாகரன் விருப்பம் தெரிவித்ததை அறிந்து ஓர் தனியார் இல்லத்தில் அவரைச் சந்தித்தோம். **அப்போது அவருக்கு வயது 25.** நாமே அரசியலில் கொஞ்சம் மூத்தவர்கள் அவரை வெறு

**மா.க.ஈழவேந்தன்.**
(பொதுச் செயலாளர், தமிழீழ விடுதலை அணி)

மனையே ஓர் துடிப்புள்ள இளைஞன் எனக் கருதிய நாம் நீண்ட உரையை நிகழ்த்தினோம். **ஆனால் அவரோ புன்னகை பூத்த நிலையில் சில கேள்விகள் கேட்டுத் தெளிவு பெறும் நிலையில் இருந்தா.** இந் நாட்டின் வரலாற்றை மாற்றுமோர் மாபெரும் தலைவனின் பெருமையை நாம் அன்று உணராததற்கு வருந்துகின்றோம். எனினும் **அவரிடம் மன்னிப்பு கேட்கும் நிலையில் அவருக்குப் பக்க பலமாக இன்று நாம் பணியாற்றுகிறோம்.**

## விலை போகாத்தன்மை

ஈழத்தமிழ் மக்களிடையே பல இராணுவ இயக்கங்கள் காளான் போல் தோன்றி மறைந்துள்ளன. விடுதலைப் புலி இயக்கத்தில் ஆக ஈராயிரம் போர் வீரர்கள் தான் உண்டு என்று ராஜீவ் காந்தியால் எள்ளி நகையாடப்பட்ட போதும், அமெரிக்காவின் பெயர் பெற்ற வாஷிங்டன் போஸ்ட் என்ற இதழ் 1500பேர் தான் என்று இழித்துக்கூறிய போதும் இன்று தமிழன் வரலாற்றை மாற்றியமைக்கும் இயக்கமாக பிரபாகரனின் இயக்கம் வளர்ந்துள்ளது.

விடுதலைப்புலிகள் இயக்கம் மிகப் பெரும் வெற்றியுற்றதற்கு அடிப்படைக் காரணம் அவ்வியக்கத்தின் ஒழுக்கம் உயிரினும் மேலாக ஓம்பப்படுகிறது. இந்தியத் துணைக்கண்டத்தின் முன்னாள் தலைமை அமைச்சர் ராஜீவ் காந்தி உட்பட பலர் பிரபாகரனை விலைக்கு வாங்க முற்பட்டனர்.

ஆனால் அவர்கள் கண்டது படு தோல்வி. எனவே தான் எதிரிகள் கணிப்பில் பிரபாகரன் மிக ஆபத்தான எதிரியாகக் காட்சி அளிக்கிறார். **எமை நத்து வாய் என எதிரிகள் கோடியிட்டு அழைத்தாலும் தொடேன்** என்ற பாரதிதாசனின் கூற்று இவருக்கு முற்றுப் பெற்றது.

## அவர் காலத்தில் வாழும் பெருமை

பிரபாகரன் வாழும் காலத்தில் நாமும் வாழ்கின்றோம் என்பது எமக்குப் பெருமை தரும் நிகழ்ச்சியாகும். சோழப் பேரரசின் பொற்காலம் முடிந்து 1000ஆண்டுகள் இடை வெளிக்குப் பின் பிரபாகரனின் தோற்றம் தமிழரின் பொற்காலமாகும். பிரபாகரனைப் பலர் பல்வேறு கண்கொண்டு பார்க்கின்றார்கள் எனினும் இன்றைய சூழ்நிலையில் விடுதலை இயக்கக் **கவிஞர் புதுவை ரத்தினம**காணும் முறையைக் கண்டு நாம் உவகையுறுவோமாக.

***இதோ அவர் இயம்பியவை***

''எங்கள் தேசியத் தலைவன் பிரபாகரனின் பெயரைச் சொல்லி முதல் விரலை மடிப்பீர்கள் **நெருப்பாக நின்று எதிரியை நோக்குவது இவரின் ஒரு பக்கம் என்றால் நிலவாகக் குளிர்ந்து நிழலாக நிற்பது இவரின் மறுபக்கம். பிரபாகரன் என்ற பெயர் தலைவன் என்றும் தளபதி என்றும் நின்றுவிடாது கலைஞன் என்றும் கவிஞன் என்றும் நீளும்.... அவரின் கொற்றக்குடையின் கீழ் நிற்கும் பல்லாயிரக் கணக்கானவர்களில் நானும் ஒருவன என்றும் பதிவு இருக்கும்** ''

நாமும் புதுவை ரத்தினம் அவர்களின் கூற்றுக்கு வழிமொழி கூறி 48ஆவது வயதில் காலடி வைக்கும் மேதகு தலைவா பிரபாகரன் அவர்கள் இன்னும் இரண்டாண்டில் அரை நூற்றாண்டை எட்டிப்பிடிக்க இருக்கிறார். அவர் தம் அரை நூற்றாண்டை எட்டிப்பிடிப்பதற்கு முன் தமிழீழம் மலர வேண்டும் என்பது எமது பேரவாவாகும்.



## ஐ.நா. மன்றத்தில் புலிக் கொடிபறக்கும்

ஐ. நா. மன்றத்தில் 191நாடுகள் அங்கம் வகிக்கின்றன சுண்டங்காய் அளவு நாடுகள் சுதந்திரம் பெற்று ஐ.நா. மன்றத்தில் அங்கம் வகிக்க முடியும் எனில் ஏன் நம் தமிழீழத்தின் புலிக்கொடி ஐ.நா. மன்றத்தில் பட்டொளி வீசி பறக்கக்கூடாது. பூத்ததடா தமிழீழம் புலர்ந்ததடா தமிழ் வாழ்வு என்ற காசியானந்தனின் கனவு நனவா கட்டும் கவிஞர்கள் காணும் கனவு என்றும் பொய்த்ததாக வரலாறு இல்லை.

# இன்று ஒரு தகவல்

## விதியை மதியால் வெல்லலாம்

ஒரு நிறுவனத்தின் பொதுக்குழுக் கூட்டம் அவசரமாகக் கூடுகிறது. அக் கூட்டத்தில் அந் நிறுவனத்தின் தலைவர், குறிப்பிட்ட ஒரு நபரைப் பதவி நீக்கம் செய்யும் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்து தனக்கு துதிபாடும் சில உறுப்பினர்களின் ஒப்புதலைப் பெற்று நிறைவேற்றி விடுகிறார். ''அவனால் என்னை என்ன செய்ய முடியும்? வீழ்த்தி விட்டேன் பார'' என்று பலரிடமும் கூறிப் பெருமைப் பட்டுக் கொள்கிறார்.

ஆனால் தலைவரால் பதவி நீக்கம் செய்யப்பட்டதாகக் கூறப்படும் நபர், வழக்கம் போல் எவ்விதப் பதற்றமும் இல்லாமல் மகிழ்ச்சியுடன் நடமாடிக் கொண்டிருக்கிறார். செய்தியைக் கேள்வியுற்றவுடன் நீதிமன்றத்துக்குச் சென்று மனு ஒன்றைக் கொடுக்கிறார். தன் தரப்பு வாதங்களை அம்மனுவில் எடுத்துக்காட்டி, நியாயம் கோருகிறார். நீதிமன்றம் அம்மனுவை ஏற்று விசாரித்து அவருக்கு சாதகமாகத் தீர்ப்பை வழங்குகிறது இதற்கென்ன காரணம்?

அங்கேதான் மதி வேலை செய்கிறது. ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற பொதுக்குழுக் கூட்டத்திற்குத் தேவையான எண்ணிக்கையிலான நபர்கள் வருகை தராததால் அத்தீர்மானம் செல்லாது என்று நீதிமன்றம் கூறிவிட்டது.

எந்த ஒரு நிறுவனத்திலுமே ஒரு தீர்மானத்தை அந்த நிறுவனத்தின் பொதுக்குழு உறுப்பினர்களில் குறிப்பிட்ட குறைந்த எண்ணிக்கையிலான உறுப்பினர்களாவது வருகைதந்திருக்க வேண்டும் என்பதுபொதுவானவிதி. இது அந்தத் தலைவருக்குத் தெரியும் எனினும் குறிப்பிட்ட நபரின்பேரிலான வெறுப்புஆத்திரம் அவர் கண்களை மறைத்தது. அதாவது அவரது சிந்தனைக்கு அந்த நேரத்தில் அந்த விவரம் எட்டவில்லை.

பாதிக்கப்பட்டதாக எண்ணப்பட்ட நபர், புத்திசாதுரியத்தால் மதிநுட்பத்தால் இக்குறையைக்கண்டறிந்து, நீதிமன்றத்தை நாடி, தனக்கு வரவிருந்த பாதிப்பை போக்கிக்கொண்டார்.

எச்சந்தர்ப்பத்திலும் புத்தி சாதுரியத்துடன் நடந்தால் எந்த இடையூறுகளையும் எதிர்கொண்டு வெல்லலாம்.

கு. சண்முகசுந்தரம்

# அனுருத்த ரத்வத்தையை லஞ்ச ஆணைக்குழு முன் ஆஜராகுமாறு பணிப்பு

(கொழும்பு)

முன்னாள் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தையை நாளை புதன்கிழமை லஞ்சஊழல் ஆணைக்குழுவின் முன்னால் ஆஜராகுமாறு அழைப்பாணைவிடுக்கப் பட்டுள்ளது.

இவரின் வங்கிப் பெட்டகங்களில் இருந்து கைப்பற்றப் பட்ட 40மில்லியன்ரூபாபெறுமதியான வங்கி வைப்புச் சான்றிதழ்கள் தொடர்பாகவே லஞ்சஊழல் ஆணைக்குழு விசாரணை செய்து வருகிறது.

இதேவேளை, அனுருத்த ரத்வத்தையின் சொத்துக்கள் தொடர்பாக குற்றப்புலனாய்வுப் பிரிவினர் விசாரணை நடத்தி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (பி-10)

# புதிய பாடவிதானத்தில் சரித்திரத்தை மீண்டும் இணைக்க ஆலோசனை

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கான பாடவிதானத்தில் சரித்திரத்தை தனியான ஒருபாடமாக மீண்டும் அறிமுகம் செய்வதுபற்றி கல்வி அமைச்சு ஆலோசனை நடத்திவருகிறது.

தற்போது பாடசாலைகளுக்கான பாடவிதானத்தில் சரித்திரம், சமூகக் கல்வியும் வரலாறும் என்ற பாடத்துடன், இணைக்கப்பட்டே கற்பிக்கப் பட்டு வருகிறது.

சரித்திரத்தை புதிய பாடவிதானத்தில் சேர்த்துக்கொள்வது தொடர்பாக கல்வியமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தலைமையில் நேற்றுமுன்தினம் கொழும்பில் விசேட ஆலோசனைக் கூட்டம் ஒன்று நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. (பி-8)

# சீனித் தொழிற்சாலையை மீண்டும் இயக்க நடவடிக்கை

(கொழும்பு)

நீண்டகாலமாகமூடப்பட்டிருந்த இங்குறன சீனித் தொழிற்சாலையை மீண்டும் இயங்கச் செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவுள்ளதாக சுகாதார, போசனை பொதுநல அமைச்சர் பி. தயாரத்ன தெரிவித்துள்ளார்.

இதனால் கடந்த 10 வருடகாலமாக கரும்பு பயிர்ச்செய்கை மேற்கொள்ளப் படாத சுமார் 11 ஆயிரத்து 188 ஏக்கர் நிலப்பரப்பில் மீண்டும் கரும்புப் பயிர் செய்கை மேற்கொள்ளப் படும்.

இதன் முதற் கட்ட நடவடிக்கையாக 6 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் இப் பயிர் செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இங்குறன தொழிற்சாலை இயங்கும் வரை குறிப்பிட்ட 6 ஆயிரம் ஏக்கரில் விளையும் கரும்புகளை வெலவத்தைசீனி ஆலைக்கு அனுப்ப ஏற்பாடு செய்யப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (பி-10)

# இந்தியா கலந்து கொள்ளாமை; தமிழ் தேசிய கூட்டமைப்பு கவலை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளை தடை செய்த நாடுகள் அனைத்தும் ஒஸ்லோ மாநாட்டில் பங்கு கொண்டுள்ள போதும் இந்தியா மட்டும் கலந்து கொள்ளாமை கவலை அளிப்பதாகவுள்ளதெனதமிழ் தேசியகூட்டமைப்பு எம்.பிக்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

தமிழ்தேசிய கூட்டமைப்பு எம்.பிக்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வம் அடைக்கலநாதன்ஜோசப் பரராஜசிங்கம் ஆகியோர் இது தொடர்பாக மேலும் கருத்து வெளியிடுகையில்;

1980ம்ஆண்டுகளுக்குப்பின்னர் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்தியா ஆர்வம் காட்டி வந்தது. சமாதானத் தீர்வு ஒன்று எட்டப்படும் இந்த நேரத்தில் இந்தியா தனது உதவியை வழங்க வேண்டும். இலங்கைத் தமிழ் மக்கள் பிரச்சினையைத் தீர்த்து வைத்துதமிழ் மக்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்வதில் இந்தியாவுக்குகூடிய உரிமை உண்டு. எனவே, இந்தியா இக்கூட்டத்தில் அவசியம் கலந்து கொண்டிருக்க வேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (ம)

# அரசுக்கும் ஐக்கிய முன்னணிக்கும் அமைதியை நோக்கி நாட்டை நகர்த்த வாய்ப்பு கிடைத்துள்ளது

## அமெரிக்க தூதுவர் கருத்து

(கொழும்பு)

''கடந்த வாரம் பொ. ஐ.மு வெளியிட்டிருந்த அறிக்கையின் தொனி எம்மை ஆச்சரியமடைய வைத்தது. அவற்றில் சில சற்றுக் கடுமையான வார்த்தைகளாக இருந்தன; சமாதானத்தை நோக்கி நாட்டை நகர்த்துவதற்கு அரசாங்கத்திற்கும், பொ.ஐ.முவுக்கும் இப்போது வாய்ப்பு அமைந்திருக்கிறது என்றே அமெரிக்கா நம்புகிறது. இந்த வாய்ப்பை அவர்கள் சாதகமாக பயன்படுத்திக் கொள்வார்கள் என்றே நாம் நம்புகிறோம்''

''இவ்வாறு கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதுவர் ஆஷ்லிவில்ஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

நேர்மையே அரசாங்கத்திற்கெதிராக அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட குற்றச் சாட்டுக்களை நாம் கருத்திலெடுத்துள்ளோம் நோர்வேயின் அனுசரணை முயற்சிகள் முக்கியமானவை, வெளிப்படையானவை, உயர்ந்த நோக்கம் கொண்டவை என்று நம்புகிறோம்.

ஒஸ்லோ மாநாட்டில் அமெரிக்க அதிகாரிகளுக்கும், விடுதலைப்புலிகள் இயக்கப்பிரதிநிதிகளுக்குமிடையேயான பேச்சுக்கள் எதுவும் இருக்காது. புலிகளின் பெயர் அமெரிக்காவினால் தடைசெய்யப்பட்ட பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலிலேயே இருக்கிறது.

கடந்தசில மாதங்களாக விடுதலைப்புலிகளினால் ஊக்கமளிக்கும் வகையிலான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருவதையும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டதையும் நாம் கருத்திலெடுத்திருக்கிறோம்.. அவர்கள் மனிதவுரிமைகளையும்ஜனநாயகத்தையும், இலங்கையரசாங்கத்தின் இறைமையையும்முழுமையாகவும் நாட்டின் அரசியற்சட்டம் மற்றும் சட்ட அமுலாக்கல் முறைமைகளையும் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக் கொள்றோம்'' என்றும் அமெரிக்கத் தூதுவரின்ஆஷ்லிவில்ஸ் கூறியுள்ளார். (இ)

## மடு உயிலங்குளம் வீதிதிறக்கப்படும்

(வவுனியா)

மாவீரர் தினத்தை முன்னிட்டு நாளை 27-ம் திகதி மடுவீதியும் உயிலங்குளம் வீதியையும் இரவு 10-00மணி வரை திறந்து வைப்பதற்கு படையினர் இணக்கம் தெரிவித்திருப்பதாகத் தெரிவிக்கப் பட்டுளளது. (வ)

## மரத்திலிருந்து வீழ்ந்து காயம்

(யாழ்ப்பாணம்)

சீவல் தொழிலாளி ஒருவர் மரத்தில் இருந்து வீழ்ந்து படுகாயமடைந்தநிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் 4. மணியளவில் அல்லாரை தெற்கு மீசாலையில் இடம்பெற்றது. வீழ்ந்து படுகாயமடைந்தவர் அதே இடத்தைச் சேர்ந்த மாணிக்கம் சிவானந்தம் (வயது-37) என்பவராவார். (பி-16)

## உடனடியாக

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

லங்களைக்கூட பிரேத அறையில் இருந்து வெளியே கொண்டுசெல்வதற்கு படையினரின் அனுமதி பெறவேண்டிய நிலையே உள்ளது எனக் குறிப்பிட்டார்.

இவ் ஆய்வுப்பட்டறையில் வண பிதா பேர்னாட், மாணவர் பேரவைத்தலைவர் எஸ். கஜேந்திரன்யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் உட்பட வேறும்பலர் கருத்துரை வழங்கினர்.

# 5 வருடங்களுக்குள் 2 இலட்சம் வேலைவாய்ப்பு

## அமைச்சர் மகிந்த விஜய சேகர உறுதி

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் இரண்டாவது வரவு-செலவுத் திட்ட அடிப்படையில், அடுத்த 5 வருடகாலத்தில் 2 இலட்சம் வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்.

இவ்வாறு கடற்றொழில் கடல்வளத்துறை அமைச்சர் மகிந்த விஜய சேகர தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அமைச்சர் தொடர்ந்தும் பேசுகையில்; தற்போது நாட்டில் உள்ள கஷ்டங்களையும் நெருக்கடிகளையும் மக்கள் சகித்துக் கொள்ள வேண்டும்.

நாடு சுதந்திரம் பெற்றதன் பின்னர் அங்கீகரிக்கப்பட்ட வரவு- செலவுத் திட்டங்கள் மக்களுக்கு சகல வழிகளிலும் தற்கால நிவாரணத்தையே வழங்கின.

நாட்டின் நீண்டகால அபிவிருத்திக்கான அடிக்கல்லை நாட்ட கடந்த கால வரவு செலவுத் திட்டங்கள் தவறிவிட்டன.

ஆனால், ஐக்கிய தேசிய அரசின் இவ்வாண்டுக்கான வரவு- செலவுத்திட்டத்தில் பொருளாதார நெருக்கடிகள் இருந்த போதிலும் அபிவிருத்திப் பணிகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும் எனவும் சுட்டிக் காட்டியுள்ளார். (பி-8)

அமைச்சர் மகேஸ்வரன் முயற்சி:

# நெடுந்தீவில் ஈ. பி. டி. பி நடமாட்டத்தில் கட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவில் இருந்து ஈ.பி.டி.பியினரை வெளியேறுமாறு கோரி நடைபெற்று வரும் ஆர்ப்பாட்டங்களை அடுத்து இந்துவிவகார அமைச்சர் தி. மகேஸ்வரன் நேற்று முன்தினம் அங்கு சென்று நிலைமைகளை கேட்டறிந்தார். அங்கு சென்ற அமைச்சர் பிரதேச செயலர், பொதுமக்கள் மற்றும் பொலிஸ் அதிகாரிகளை சந்தித்து கலந்துரையாடிசில முடிவுகள் எடுக்கப்பட்டன.

ஈ பி டி பியினர் நெடுந்தீவு பிரதேசத்தில் 6 மணிக்குப் பின்பு தமது முகாமை விட்டு வெளியில் நடமாடுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது:

★ ஈ.பி.டி.பியினர் வெளியில் நடமாட வேண்டுமாயின் பொலிஸாரின் உதவியுடன் சென்று திரும்புதல் வேண்டும்;

★ கலவரத்தையடுத்துமூடப்பட்டிருந்த வீதிகள் யாவும் பொலிஸாரினால் மக்கள் பாவனைக்கு அனுமதித்தல்.

★ கலவரத்தினை அடுத்து நெடுதீவு பிரதேச சபையில் நிலை கொண்டிருந்த ஈ.பி.டி.பி.யினர் வெளியேறி மக்கள் பாவனைக்கு பிரதேச செயலகத்தை வழங்குதல்.

ஆகிய முடிவுகள் எடுக்கப்பட்டதாக அமைச்சர் திரு மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்:

இதேவேளை நெடுந்தீவில் ஏற்பட்ட கலவரத்திற்கும் விடுதலைப் புலிகளிற்கும் நிச்சயமாக எவ்வித தொடர்பும் இல்லை எனவும், அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்களை அமைதிப்படுத்துவதற்கு தங்களாலான முயற்சிகளை எடுத்துள்ளார்கள் என்று அவர் தெரிவித்தார். (பி-5)

## ஜனநாயகம் செயல்படுவதற்கு

# மக்கள் துடிப்புடன் பங்கேற்கும் கட்டமைப்பு இருக்கவேண்டும்

- அர்ஜுனா ஹாலுகல்ல

ஜனநாயகம் செயல்படுவதற்கு சகல பிரஜைகளும் பங்கேற்பதையும் துடிப்போடு பங்களிப்பு செய்வதையும் வளர்த்து ஊக்கமூட்டக்கூடிய கட்டமைப்பு ஒன்று இருக்க வேண்டும். வெறும் பார்வையாளர்களாக இருப்பதென்பது உரிமைகளை சர்வாதிகார ஆட்சிக்கு கையளிப்பதற்கான ஒரு வழியாகவே முடியும்.

துடிப்புள்ளதும் பங்கேற்பதற்குரியதுமான ஒரு ஜனநாயக அமைப்பில் தனிப்பட்ட பிரஜைகளுக்கு சமூகத்தின் மேன்மையும் விவகாரங்களும் தம் சொந்த அக்கறைக்குரியவை போன்று முக்கியத்துவம் பெறுகின்றன. இது தனிப்பட்ட நபர்களுக்கு வாழ்க்கையில் புதிய உத்வேகத்தை கொடுக்கின்றது மற்றவர்களாகக் குறித்து ஒரு வித பொறுப்புணர்ச்சியை அவர்களுக்கு வழங்குகின்றது. இது குறிப்பிடுமளவுக்கு அவர்களின் நடத்தைகளிலும் மேம்பாட்டை உருவாக்குகின்றது. ஸ்திரமானதோர் சமூகத்துக்கு அவர்களின் நன்னடத்தையானது நல்ல சுத்தமாக அமைந்துவிடும்.

இவ்வித உத்வேகத்தை மக்கள் மத்தியில் உருவாக்குவதற்கான ஒருவழி என்னவென்றால் பொருளாதாரம், வெளிநாட்டு கொள்கை சுகாதாரம் கல்வி மற்றும் மக்களின் நல்வாழ்வைப் பாதிக்கும் ஏனைய விடயங்கள் தொடர்பாக விவாதிக்கவும் தீர்மானங்கள் எடுக்கவுமான நிரந்தர அமைப்புக்களைதெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டு அமைத்துக் கொள்வதாகும்.

மக்கள் தங்கள் கோரிக்கைகளை கேட்டு பெறுவதில் உத்வேகத்தையும் அக்கறையையும் இதன் மூலம் உருவாக்க முடியும்.

இதேவேளைஇந்த அமைப்புகளுக்கு தேவையான தகவல்கள் கிடைத்துக் கொண்டிருக்கவும், தகவல்களைப் பெற்றுக் கொள்ளவும் வசதிகளை மத்திய அரசும் சமூகமும் உறுதிசெய்ய வேண்டும். சாதுர்யமாகவும் சமத்துவமாகவும் தீர்மானங்கள் எடுப்பதற்கு இவை உதவியாக இருக்கும்.

> 'த ஐலன்ட்' பத்திரிகையில் வெளியான இக் கட்டுரையைசுருக்கி தமிழில் தருகின்றார் எஸ். சுந்தர்.

இன்று ஜனநாயக அமைப்புகள் என்பவை நாம் இங்கே குறிப்பிடும் விடயங்களைத் தவிர்த்துவிடுகின்றன. அவர்கள் கருத்துக்கணிப்புகளை அல்லது நடைமுறையிலுள்ள விசாலமான தேர்தல் மாவட்டங்களைக்கொண்ட முறைகளைக் கைகொள்கின்றன. இந்தத் தேர்தல்களில் வெளியிடப்படும் கருத்துக்களாவன கொடுக்கப்பட்ட ஒரு குறித்த நேரத்தில் வெளிப்படும் மனோ நிலையைப் பொறுத்தே அமைகின்றன. சூழ் நிலைகள் மாறும்போது மாற்றுக் கருத்துகளைத் தோற்றுவிக்கக் கூடிய அடிக்கூறுகளை இவை வெளிப்படுத்துவதில்லை:

கருத்துக் கணிப்புகளைவிட அரசியல் தேர்தல்கள் இன்னும் மோசமாகவுள்ளன. ஏனென்றால் கட்சிகள் விளம்பர முகவர்களின் பல்வேறு விதமான கவர்ச்சி முறைகளை கையாள்கின்றன.

தேர்தல்கள் மக்களை உண்மைக்குமாறான சினிமா உலகுக்கு இட்டுச் செல்கின்றன.

அரசியல்வாதிகளின் வாக்குறுதிகளையும் நம்பிக்கையூட்டல்களையும் மக்கள் நம்பி விடுகிறார்கள் உண்மையான அரசியல் பிரச்சினைகள் மறக்கப்பட்டுவிடுகின்றன.

தேர்தல் முடிவுகளின் அறிவிப்பானது படம்முடிந்து வெளியில் வருவது போன்ற உணர்வை ஏற்படுத்துகின்றன.

இலங்கை போன்ற ஒரு நாடு தேர்தல்களில் ஏன் இவ்வளவு பணத்தை செலவு செய்கிறது என்று விளங்கிக் கொள்ள முடியவில்லை. பல கோடி ரூபாய்களை இது விழுங்கி விடுகின்றது.

ஒவ்வொரு தேர்தலின் போதும் கொலைகள், லஞ்சம், பயமுறுத்தல் வன் செயல்கள், வாக்களிப்பு மோசடிகள் போன்றவை இடம்பெறவே செய்கின்றன. இது போதாதென்று நாம் எப்படி நடந்து கொள்கின்றோம் என்பதைக் கண்காணிக்க வெளிநாட்டவர்களும் கொண்டுவரப்படுகிறார்கள். இவை எல்லாம் தேவை தானா?

இதனை எப்படி மாற்றலாம்? ஒரு வாக்காளனின் உண்மையான நம்பிக்கையும், வாக்களிப்பின் மதிப்பும் இரண்டு அம்சங்களில் தங்கியுள்ளன. முதலாவதாக வாக்காளர் தாம் தீர்மானம் எடுக்கவேண்டிய விடயம் தொடர்பாக அவருக்கு போதிய தகவல்கள் கிடைக்க வாய்ப்பிருக்கவேண்டும். இரண்டாவதாக அவர் மதிக்கப்படுவதாகவும், அவரது குரல் கேட்கப்படுவதாகவும் இருக்கவேண்டும் தெரிவு செய்யப்பட்டவர் தேர்தலுக்குப் பின்னரும் வாக்காளருக்கு விடையளிப்பவராகவும் இருக்கவேண்டும். (பி)

(தொடரும்)

# வடமராட்சி கிழக்கில் மாவீரர் எழுச்சிநாள் இன்று

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு தாளையடிப் பிரதேசத்தில் இன்று மாலை 2 00மணிக்கு மாவீரர் எழுச்சி விழா நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் மருதங்கேணிச் சந்தியில் ஆனையிறவுத் தள வெற்றிக்கு வழிகோலிய குடாரப்பு தரையிறக்க நினைவாக அமைக்கப்பட்டுள்ள நினைவுக்காட்சி திரை நீக்கம் செய்யப்படவுள்ளது

இவ்விழாவில் கடற்புலிகளினதும் மற்றும் கடற்கரும புலிகளினதும் விசேட படையணிகளின் அணிநடை இடம்பெறவுள்ளது.

வடமராட்சி கிழக்கு பிரதேச கடற்றொழிலாளர் சங்கங்கள் சமாசம், கூட்டுறவுச் சங்கங்கள் தென்னை, பனை அபிவிருத்திச் சங்கங்கள், விவசாய உற்பத்திச் சங்கங்கள் புனரமைப்புக்குழு ஆகியன கலந்து கொள்ளவுள்ளன (பி-8)

# இந்திய - இலங்கை கப்பல் சேவை உடன்பாடு விரைவில் கைச்சாத்து

(கொழும்பு)

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் பயணிகள் கப்பல் சேவை நடத்துவது தொடர்பான உடன்படிக்கை வெகுவிரைவில் கைச்சாத்திடப்படவுள்ளதாக துறைமுக அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இரண்டு நாள் உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு இந்தியா சென்றுள்ள துறைமுக அபிவிருத்தி கப்பல்துறை அமைச்சரும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமானரவூப் ஹக்கீம் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜஸ்வந் சிங்க, இந்திய கப்பல் துறை அமைச்சர் வேத் பிரகாஷ் கோயால் ஆகியோருடன் இது குறித்து பேச்சு வார்த்தை நடத்தினார்.

இதனையடுத்து இரு நாடுகளுக்குமிடையிலான பயணிகள் கப்பல்சேவை தொடர்பான உடன்படிக்கை தயாரிக்கப்பட்டு வருவதாகவும், அதன் பின்னர் உடன்படிக்கை இலங்கையிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகர் ஊடாக அமைச்சரவை அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் இலங்கைக்கும் இந்தியாவுக்குமான பயணிகள் கப்பல் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது. (உ-5)

# பயன்படுத்தாத நிலையில் 800 மில்லியன் ரூபா

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணத்தில் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கென கடந்த காலங்களில் உலக வங்கியினால் ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவிடப்படாத நிதியினை, கல்வி மற்றும் சுகாதாரத்துறை அபிவிருத்திக்காக பயன்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 10 வருடகாலங்களில் உலக வங்கியினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதியில் சுமார் 800மில்லியன் ரூபா செலவிடப்படாதுள்ளதாகவும்.

இந்நிதி கடந்த காலத்தில் ஏற்பட்டுள்ள யுத்தம் காரணமாகவே உரிய திட்டங்களிற்கு பயன்படாது இருந்ததாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இந்நிதியை இம்மாதம் இறுதிக்குள் உரிய திட்டங்களுக்கு செலவிடப்பட வேண்டுமென சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளதாக வடக்கு- கிழக்கு மாகாண கல்வி அமைச்சு உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்; (உ- 10)

# அம்பாறையில் இயல்புநிலை ஏற்படுத்த அரசு-விடுதலைப் புலிகள் இணக்கம்

(அம்பாறை)

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற அம்பாறை மாவட்ட பாதுகாப்பு உப குழுக் கூட்டத்தில், இம் மாவட்டத்தில் நிலவும் இராணுவக் கெடுபிடிகளை நீக்கிசுமுக நிலையைத் தோற்றுவிக்க அரசு- புலிகள் இரு தரப்பும் இணக்கம் கண்டுள்ளன.

அம்பாறை மாவட்ட உப குழுக் கூட்டம் கடந்தசனிக்கிழமை அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தில் கண்காணிப்புக் குழுவின் அனுசரணையுடன் இடம் பெற்றது.

இதில், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தலைமையில் மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொட, 23 வது படையணியை சேர்ந்த பிரிகேடியர் பாலசூரிய விமானப் படையின் குரூப் கப்டன் கோலித குணதிலக அம்பாறை மாவட்ட அரச அதிபர் எல்.எஸ். சி. சிறிவர்த்தன மற்றும் முஸ்லிம் தரப்பில எம். அப்துல் மஜீத் ஆகியோரும்.

புலிகள் தரப்பில் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் தலைமையில் அம்பாறை அரசியல் பிரிவுத் தலைவர் வவா, அம்பாறை மாவட்டத் தளபதி ஜனார்த்தன், அம்பாறை அரசியல் பிரிவைச் சேர்ந்த பானு ஆகியோரும்.

போர் நிறுத்த கண்காணிப்புக்குழுவின் மாவட்டத் தலைவர் கப்டீ யூலிஸ்ஸன், சுட்டஆலே சகர் பிகாவி காவல் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

பேச்சுக்களின் முடிவில் அரச தரப்பில் ஒஸ்ரின் பெர்னாண்டோவும், புலிகள் தரப்பில் கௌசல்யனும், கண்காணிப்புக் குழுத் தரப்பில் கால்யூலிஸ்ஸனும் கைச்சாத்திட்டு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளனர்

அந்த அறிக்கையில், கல்முனை வாடி வீட்டில் நிலைகொண்டுள்ள பொலிஸார் அங்கிருந்து மூன்று தினங்களுக்குள் வெளியேறி விரைவாக அதனை பொதுமக்களின் பாவனைக்கு விடுப்பது,

காஞ்சிரங்குடா அதிரடிப் படை முகாமினுள் அமைந்துள்ள பாடசாலையில் இருந்து படையினர் வெளியேறி முகாமிற்கும் பாடசாலைக்கும் இடையே வேலி அமைப்பதுடன், பாடசாலையை வழமைபோல இயங்க அரச அதிபர் நடவடிக்கை எடுத்தல்,

திருக்கோவில் அதிரடிப் படை முகாமை அடுத்த வருட மார்ச் மாதத்திற்கு முன்னதாக பிறிதொரு இடத்திற்கு அகற்றுதல்,

வேகத்தடைகளை உடனடியாக வீதிகளில் இருந்து அகற்றுதல்-உள்ளிட்ட பொதுமக்களின் இயல்பு வாழ்வுக்கு குந்தகம் விளைவிக்கும் செயற்பாடுகளை நிறுத்துவதற்கு இணக்கம் காணப்பட்டிருப்பதாககுறிப்பிடப்பட்டுள்ளது

இதேவேளை, முஸ்லிம்கள் தொடர்பான பிரச்சினைகள் அவர்களது பிரதிநிதியான எம் அப்துல் மஜீத்திற்கும், புலிகளுக்கும் இடையே பேசித் தீர்வு காணப்படாது, போகுமானால் இது தொடர்பான விடயங்கள் புலிகளின் தலைமைப் பீடத்திற்கும், ஸ்ரீலங்கா முஸ்லிம்காங்கிரஸ் தலைமைப்பீடத்திற்கும்சமர்ப்பிக்கப்படும் எனவும் இணக்கம் காணப்பட்டுள்ளது. (உ-8)

# வீதிகளில் கற்குவியல்

(துன்னாலை)

வடமராட்சிப் பகுதியில் உள்ள மாலுசந்தியில் இருந்து மந்திகை சந்திவரையான பகுதியில் கடந்த ஒரு மாதகாலமாக வீதி திருத்துவதற்கென போடப்பட்டுள்ள கற்குவியலினால் இவ் வீதியூடாகசெல்லும் வாகனங்கள் பெரும்அசௌகரியங்களிற்குள்ளாகின்றன என தெரிவிக்கப்படுகிறது. (பி-41)

# பாதுகாப்பு வலயங்களை உடனடியாக அகற்றுவது சாத்தியப்படாதாம்

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் படையினரின் பாவனையில் இருந்த அரசகட்டடங்களில் இருந்து படைத்தரப்பினர் வாடகை வாங்கியுள்ளனர் பொதுமக்களின்கட்டடங்களில்இருக்கும் படையினரை விரைவில் அங்கிருந்துவிலகிக் கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன

இவ்வாறு பலாலிப் படைத்தளத்தை சேர்ந்த பிரிகேடியர் அருணா ஜயதிலகா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பண்டத்தரிப்பிலுள்ள தியாக இலலத்தில் முரண்பாட்டுக் கற்கைநெறிகளுக்கானபோர் கொவ் நிறுவனத்தினால நடாத்தப்பட்ட 'அதிஉயர்பாதுகாப்பு வலயங்களும் சமாதான நடைமுறைகளும்' என்னும் தலைப்பிலான ஆய்வுப்பட்டறையில் கலந்துகொண்டு பேசுகையிலேயே பிரிகேடியர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பிரிகேடியர் அருணாஜயதிலகா தொடர்ந்தும் அங்கு கருத்து தெரிவிக்கையில்;

அதியுயர் பாதுகாப்பு வலயமாகிய தெல்லிபழையில் இரு பாடசாலைகளை மீளவும்அங்கு இயங்க அனுமதித்துள்ளோம் அதியுயர் பாதுகாப்பு வலயங்களை இல்லமல்செய்வது உடனடியாகச் சாத்தியமான காரியமல்ல எனக்கூறினார்

தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ்மாவட்ட மகளிர் பிரிவைச்சேர்ந்த பொறுப்பாளர் தமிழ்விழிஅங்கு கருத்துரையாற்றும்போது;

தமிழீழத் தேசியத்தலைவருக்கும இலங்கைப்பிரதமருக்குமிடையில்புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி ஒன்பது மாதங்கள்ஆகிவிட்ட நிலையிலும் இதுவரை 45 சதவீதமானவையே அமுல்செய்யப்பட்டுள்ளன; இருந்தபோதிலும்கூட குடாநாட்டில் படைத்தரப்பினரின் செயற்பாடுகள் காரணமாக சாதாரணபொதுமக்கள் மத்தியில் அச்சம் குடிகொண்டுள்ளதை எம்மால் அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.

இங்குள்ள ஆயிரத்து 25சதுர கிலோமீற்றரில்114 சதுர கிலோமீற்றர்இன்னமும் அதியுயர் பாதுகாப்புவலயம்என்றபெயரில் உள்ளது இடம்பெயர்ந்த சுமார் 30 ஆயிரம் குடும்பங்கள் இன்னமும்முகாம்களிலும் நண்பர்கள் வீடுகளிலுமேயே இருக்கின்றனர்.

யாழ்ப்பாணம் அரசினர் வைத்திய சாலைக்குப் பின் பக்கமாக இராணுவமுகாம் இருப்பதால் வைத்திய சாலையில் இறந்தவர்களின் சட

(5-ம் பக்கம் பார்க்க)

# வேங்கையின் தலைவனை வாழ்த்துவோம்




## வையம் வாழும் வரை வாழ்த்துவோம்

என் இனிய தேசமே
எழுபடுவான் தரையில்
எழுந்த சூரியன் இவன்
வந்து பார்
விடுதலைக் கதிர் தெறிக்கும்
விழிகளை
பகை விரட்ட படைஎடுத்த
புய வலிமையை
யுத்தத்தின் கணைகள்
கீற முடியாத
இவன் பலத்தினுள்ளும்
துளையிட முடியாத இவன்
ஓசோன் மண்டல
இதயத்துள்ளும் தான்
எம்தேசம்
அரண் செய்யப்பட்டுள்ளது
இனத்தின் அச்சாணியாய் .
ஈரிருபதுடன் எட்டு
ஆண்டுகளாய்
சுழலும் வீரனே எம் தலைவன்
நீ வாழிய நீடூழி வாழுவாய் வாழி

*சொலமன் சூ.சிறில்*
(தலைவர், யாழ்ப்பாணமாவட்ட
பொது அமைப்புகளின் ஒன்றியம்)

## வேங்கைகளின் வேந்தன்

தமிழினம் தொலைத்து விட்ட சுதந்திரத்தைத் தேட
தமிழினம் விற்று விட்ட தன் மானத்தை மீண்டும் மீட்க
தலை நிமிர்ந்த மனிதனை தமிழீழகம் காண
வீரத்தாயின் பிரசவ வேதனையின் பின்னால் ஓர் ஜனனம்
அன்றைய குழந்தைதான் இன்றைய "வேங்கைகளின் வேந்தன்"
அன்றைய அந்தக் குழந்தைச் சிரிப்பு
இன்றும் இவனுடன் கொஞ்சிக் குலாவும்
அந்தக் குழந்தை உள்ளம் இன்றும் இவனுடன் சொந்தம்பேசும்
அந்தப் பிஞ்சுக்கால்களின் பூப்போன்ற மென்மை
இன்னும் இவன் உள்ளத்துள் இமயமளவு உயரத்தில்

வீரம் அது இவன் காலடிச் சுவடுகளிலிருந்து விழித்துக்கொள்ளும்
இவனது சுதந்திரச் சிறகுகள் அகலமானவை
மிக....மிக...அகலமானவை
அதனால் இவனைச் சிறைவைக்க முயன்றவர்கள்
தங்களையே சிறைக்குள் போட்டுக் கொண்டார்கள்

இவன் எல்லாவற்றையுமே தனக்குரிய தாக்கி
எதையுமே தனக்கென்று சொல்லத்தெரியாதவன்
வரலாற்றை வழிகாட்டியாக வரித்துக் கொண்டவன்
இன்று ஒரு வரலாற்றுக்கே வழிகாட்டியாகி விட்டான்!

இவன் கைகள் மட்டும் ஆயுதம் ஏந்தும்
இவன் கண்களோ கருணை வெள்ளத்துள் நீந்தும்
எழுதி...எழுதி... எத்தனை எழுதியும்
இவனைப் பற்றிச் சொல்ல முடிவது சொற்பமே!
சொல்லக் கிடப்பதோ மிச்சம்

*(கப்டன் வானதியின் கவிதையிலிருந்து
எடுக்கப்பட்ட சில வரிகள்)*

## எங்கள் தலைவன் பிரபா வாழி!

தமிழர் தலைவன் பிரபா கரனே!
தாயகம் போற்றும் பிரபா கரனே!
புரட்சி வீரன் பிரபாகரனே!
புதுமை படைத்தவன் பிரபா கரனே!
இதயமாய் இருப்பவன் பிரபா கரனே!
தேசம் காப்பவன் பிரபா கரனே!
தேன்தமிழ் வளர்ப்பவன் பிரபா கரனே!

தடைகள் உடைத்தவன் பிரபா கரனே!
படைகள் நடத்திடும் பிரபா கரனே!
வெற்றிகள் சேர்த்தவன் பிரபா கரனே!
வேதனை சாய்த்தவன் பிரபா கரனே!
போரினில் தேர்ந்தவன் பிரபா கரனே!
பாரினில் நிமிர்ந்தவன் பிரபா கரனே!

அமைதியை அழைத்தவன் பிரபா கரனே!
அரும்பெரும் நாயகன் பிரபா கரனே!

உயிரில் கலந்தாய் பிரபா கரனே!
உணர்வாய் உள்ளாய் பிரபா கரனே!
சாதனை செய்வோன் பிரபா கரனே!
சங்கெடுத் தூதுவோம் பிரபா கரனே!
பிறந்தநாள் இன்று தான் பிரபா கரனே!
பாடுவோம் ஆடுவோம் பிரபா கரனே!
ஆண்டுகள் நூறெனப் பிரபா கரனே!
அவனியில் வாழுவாய் வாழி! வாழி!

*- பொலிகையூர்
சு.க. சிந்துதாசன -*

## தேமதுரத்தமிழ் போல் தலைவனே வாழி

தேசியத் தலைவனை தேமதுரத் தமிழாலே
தேசமக்களுடன் வாழ்த்துகின்றோம்
ஆசியாவின் புகழ் மிக்க தலைவனை
அற்புதமான பிரபாகரனென்னும் பெருமன்னனை
நேசித்து நெடுந்தமிழால் பூஜித்து
நீள நினைந்து நாளும் வணங்குகின்றோம்
பூஜிக்கத்தக்க மானத்தமிழ் மறவனே!
"பொங்குதமிழ்" போல் வாழி பல்லாண்டு

*- ஈழத்தரசன்*

# மாவீரர் நாள் ஆரம்பக் காட்சிகள்

## கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில்...

படங்கள்:~ஜெயகாந்தன்~ றொபேட்சன்





யாழ் மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் சி.இளம்பரிதி தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றுகிறார்.





பெண் போராளி ஒருவர் அஞ்சலி செலுத்தும் காட்சி





மாவீரரின் பெற்றோர் அஞ்சலி செலுத்துகின்றனர்

## கிளிநொச்சி சாள்ஸ் படைப்பிரிவு 1வது மாவீரர் துயிலும் இல்லம் திறப்பு...



கேணல் சொர்ணம் தமிழீழ தேசியக் கொடியை ஏற்றும் காட்சி



மாவீரர் சாள்ஸின் (சீலன்) தாயார் உட்பட போராளிகள் அகவணக்கம் செலுத்தும் காட்சி




பொது ஈகச் சுடர் தமிழீழ மாவீரர் பணிமனை துணைப் பொறுப்பாளர் ஏற்றுகிறார்

## காரைநகரில் மாவீரரின் பெற்றோர் கௌரவிப்பு...

படங்கள் ப.ஐங்கரன்



மாவீரர்களின் பெற்றோர்



தீவகக் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செம்மணன் ஈகச் சுடர் ஏற்றுகிறார்

## மாவீரர் தினத்தை முன்னிட்டு சாவகச்சேரி வீதிகளில் அலங்காரக் கொடிகள்

தமிழீழவிடுதலைப் புலிகளின் மாவீரர் தினத்தை முன்னிட்டு சாவகச்சேரி நகரம் எழுச்சிக்கோலம் கொண்டுள்ளது; வீதிகள் தோறும் அலங்காரவளைவுகளும், மஞ்சள் சிவப்பு கொடிகளும், கொட்டகைகளும் கட்டப்பட்டுள்ளன.

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர்மன்றத்தின் ஏற்பாட்டில் நகரமையப் பகுதியில் மாவீரர் நினைவுப்பந்தல் அமைக்கப்பட்டுள்ளது.

நேற்றையதினம் இப்பந்தல் முன்பாக தேசியக் கொடியை தமிழீழவிடுதலைப் புலிகளின் தென்மராட்சிப் பிரிவு கொள்கை முன்னெடுப்புப்பிரிவுப் பொறுப்பாளர் ஸ்ரீநாத் உணர்வுபூர்வமாக ஏற்றிவைத்தார்.

இதனைத் தொடர்ந்து அங்கு வணிகர் மன்றத்தலைவர் பி. என். சற்குணராஜா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் உப அதிபர் க. அருந்தவபாலன் மாவீரர் நினைவுச் சொற்பொழிவை நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்துசாவகச்சேரி நகர பொறுப்பாளர் தமிழ்மாறன் உறுதியுரை நிகழ்த்தினார்.

(பி-77)

## நெடுந்தீவு விவகாரத்தை ஒஸ்லோ மாநாட்டில் ஆராய ஜனாதிபதி குமாரதுங்க கோருகிறார்

(கொழும்பு)

நெடுந்தீவில் இப்பொழுது நிலவும் பாதுகாப்புநிலைவரம் பற்றி நோர்வேயில் நடைபெறவிருக்கும் அடுத்த கட்டச் சமாதான பேச்சுக்களின் போது எடுத்தாராயுமாறு ஜனாதிபதி குமாரதுங்க, கடந்த வெள்ளியன்று கண்காணிப்பு குழுவிடம் கேட்டுள்ளார்.

இதே வேளை, இது பற்றி குறிப்பிட்டு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அறிவித்துள்ளார். பிரதமர் லண்டனூடாக ஒஸ்லோ புறப்படுவதற்கு ஒரு சில மணி நேரமிருக்கையில் இது குறித்த ஜனாதிபதியின் கடிதம் பிரதமருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

வெள்ளிக்கிழமை ஜனாதிபதி கூட்டிய கூட்டத்தில் கண்காணிப்பு குழுவுடன், டக்ளஸ் தேவானந்தா, லயனல் யலகல்ல, அமைச்சர்கள் திலக் மாரப்பன, ஜோன் அமரதுங்க, ஒஸ்ரின் பெர்னாண்டோ, எம். என். ஜூனைத், கோ: பாலபட்ட பெண்டி, மங்கள சமரவீர ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். கூட்டம் ஜனாதிபதி செயலகத்தில் இடம் பெற்றிருந்தது. ஈ.பி.டி.பி. கட்சியினர் நெடுந்தீவிலிருந்து வெளியேறவேண்டும் என்னும் நெடுந்தீவுமக்களின்கோரிக்கை பற்றி ஆராயப்பட்டது. இந்த விவகாரம் பற்றி ஒஸ்லோ. சமாதானப் பேச்சுக்களின் போது உத்தியோக பூர்வமாகவோ. உத்தியோகபூர்வ மற்ற முறையிலோ எடுத்துப் பேசப்பட வேண்டுமென்று அங்கு ஜனாதிபதி வலியுறுத்தினார்.

இந்த நெருக்கடிக்கு அர்த்தமுள்ள தீர்வொன்றைக்காண்பதற்கு, வடக்கு- கிழக்கின் அரசியற் கட்சிகள் இது பற்றி தமக்குள் உரையாடல்களை நடத்துதல் சிறந்தது என பாதுகாப்பு செயலர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தெரிவித்திருந்தார்; சமாதான செயலகத்தினதும், கண்காணிப்புக் குழுவினதும் ஒத்துழைப்புடனும் இதனை செய்ய வேண்டுமென்று அவர் கேட்டுக் கொண்டார்;

ஒஸ்லோ நகரிலிருந்து30நிமிடப் பிரயாணத்தில் சென்றடையக்கூடிய ஹொல்மென் கோலன் பார்க் ஹோட்டலில் மொத்தம் 39 நாடுகள் பங்குபற்றும் இலங்கைக்கான சமாதான ஆதரவு மாநாடு நேற்று ஆரம்பமாகியிருந்தது. இதில் இலங்கைப் பிரதமர் விக்கிரமசிங்கவுடன் நான்கு அமைச்சர்கள் கலந்து கொள்கின்றனர்.

வடக்கு-கிழக்கு மாகாணங்களின் புனர்வாழ்வு புனர்நிர்மாணவிவகாரங்களே முக்கியமாக பேசப்படவுள்ளதனால் வன்னிக்கான புனர்வாழ்வு அமைச்சர் நூர்தீன் முகமதுவும் தூதுக்குழுவில் சேர்க்கப்பட்டுள்ளார். இதன் மூலம் முஸ்லிம் விவகாரங்களுக்கு முக்கியமான இடம் வழங்கப்பட்டுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன புலிகளின்தூதுக் குழுவில் திரு.திருமதி பாலசிங்கத்துடன் அவுஸ்திரேலியாவிலிருந்து ஜோய் மகேஸ்வரனும் கலந்து கொள்கிறார்.

தான் கலந்து கொள்வது பற்றி இறுதிவரை தீர்மானிக்காதிருந்த இந்தியா, நோர்வேக்கான அதன்உயர்ஸ்தானிகர் கோபால கிருஷ்ண காந்தி தலைமையில் சிறிய குழுவொன்றை அனுப்பியுள்ளது இதேவேளை, பிரதமர் விக்கிரமசிங்க தனித்தனியாக நோர்வே பிரதமர் கிழல் பொண்டேலிக். அன்ரன் பலசிங்கம், அமெரிக்க பிரதிநிதி றிச்சாட் ஆர்மிரேஜ் பிரிட்டிஷ்பிரதிநிதிகிளெயார்ஷோட் ஜப்பானிய பிரதிநிதி அகஷி ஆகியோரை சந்திப்பார். இம்மாநாடு அடுத்தாண்டு நடுப்பகுதியில் ஜப்பானில் நடைபெறவிருக்கும் பெரியதொரு உதவிவழங்கும் நாடுகளின மாநாட்டிற்கு முன்னோடியாக விளங்குகிறதென்று ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர் மாநாடு நடைபெறும் ஹொல்மென் கோலன் ஹோட்டல் 108 வருடங்கள் பழமையான மலைப்பகுதியில் அமைந்துள்ளது.

(பி)

## காங்கேசன் துறைமுகம் நவீனமயமாகும்

(கொழும்பு)

காங்கேசன்துறை துறைமுகம் விரைவில் நவீனமயப்படுத்தப்படவுள்ளது என கப்பல்துறை, துறைமுக அபிவிருத்தி அதிகார சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதுதொடர்பான அறிக்கை ஒன்றினை இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை, வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்துள்ளது.

அத்துறைமுகத்தினைசுமார் ஆயிரத்து 350 மீற்றருக்கு நீடிப்பதும் துறைமுகத்துக்கு செல்லும் வீதியை புனரமைப்பதும் இத்திட்டத்தில் அடங்குகின்றன.

மேலும் இத்துறையை அபிவிருத்தி செய்ய வேண்டுமானால், இதற்கென வெளிநாட்டு நிறுவனங்களின் உதவி கோரப்பட வேண்டும் என துறைமுகங்கள் கப்பல் துறை அமைச்சு தெரிவித்துள்ளது

(பி-8)

# வியாழ, சனி பகவான்களின் வக்கிரம் நாட்டுக்கு நன்மை பயக்குமா?

(நேற்றைய தொடர்ச்சி)

தற்போது அமையும் சனீஸ்வர கிரகவக்ரம் 12.12.2002 ல் தோன்றும். வியாழன் வக்ரம் என்னபலன் செய்யும்?

தற்போது சனீஸ்வரனது வக்ரப்பெயர்ச்சி 12 10 2002 ல் துவங்கியுள்ளது சனிக்கிரகம் இடபராசியின் அமையும் மிருகசீரிட நட்சத்திரத்தில் வக்ரம் ஆரம்பமாகியுள்ளது. இதேநேரம் சூரியன் கன்னிராசியில்சென்றுகொண்டிருந்தது இந்தவக்ரப்பெயர்சி காலம் 07.02 2003 வரை அமையவுள்ளது. வியாழ பகவான் 12 12 2002 ஆம் நாளில் வக்ரகெதியை ஆரம்பிக்கிறார் இந்தநிலையில் மேற்படி பாவக்கிரகமான சனியும், சுபக்கிரகமான வியாழனும் சமகாலத்தில் வக்ரமடைவதால், பூமியைவிட மிகவும் பிரமாண்டமான கிரகங்களான இவைஇரண்டின் வக்ரப்பெயர்ச்சியால் தோன்றவுள்ள தாக்கங்களால் நமது உலகத்தில் பாரியவிளைவுகள் தோன்ற வாய்ப்புகள் அமையவுள்ளன இவற்றின் வக்ர கெதி நிலைமையால் பூமியில், நாடுகள்தோறும் மானுட வாழ்விலும்பல மாற்றங்கள் நடக்கப்போகின்றன.

கிரகவக்ரப்பெயர்ச்சி அமையும் காலங்களில், எரிமலை குமுறல், பூகம்பம் சூறாவளி, சமுத்திர பூகம்பம், பெருமழை கடல்பெருகி உயர்தல், வெள்ளப்பெருக்கு, அக்கினியால் பேரழிவுகள் ஏற்படவுள்ளன. வாகனவிபத்து, ரயில்விபத்து கடல்கப்பல், விமானவிபத்துகள் அணுத்தொழில் சாலை விபத்துகள் தோன்றும் பொது மக்கள் மத்தியில் குழப்பம், கலவரம் தோன்றும், வன்முறைவாதிகள் அழிவுநாச வேலைகளில் ஈடுபடுவார்கள். யுத்தவெறிகொண்ட தேசங்கள். போர்களை ஆரம்பித்து மற்றநாடுகளை அழிவுசெய்யும் தாமும் அழிவுகளைச் சந்திக்கும்நிலை உண்டாகும்.

24.11 2002 இல் இருந்து இந்தநிலைமை படிப்படியாக உருவாகும். 24 11.2002 இல் இருந்த வக்ரச்சனியை துலா ராசியிலிருந்து செவ்வாய் கிரகம் நேரேநோக்கும்காலத்தில் கிரகயுத்தநிலை வானமண்டலத்தில் அமையும் இதனால் 2003 ஆம் ஆண்டு பங்குனி மாதம்முடியும்வரை உலகின் பலபாகங்களில் பாரிய அழிவுகள் இடம்பெறவுள்ளன. 10.12 2002இல் இருந்து செவ்வாய் கிரகத்தின்பார்வை சனியை ராகுவையும் நெருக்கமாக அண்டி அமையப்போவதால் கிரகங்களின் யுத்த அதிர்வுத் தாக்கங்கள் மிகத்தீவிரமாக ஆரம்பிக்கும் இதனால்,

சோதிடஞானி

**அ. சண்முகலிங்கம்**

தலைவர், தமிழர்சோதிட ஆராய்ச்சிகழகம், யாழ்ப்பாணம்.

பூமியின் மத்திய கோட்டின் அயலில் உள்ள நாடுகள், பூமியின் தென் கிழக்கு, மேற்குப் பகுதிகள் அதிக அளவில் பாதிப்புகளை எதிர் கொள்ள வேண்டி வரும், தேசங்கள் தோறும் தென் கிழக்கு மேற்குப் பகுதிகளில் அழிவு, சேதங்கள் நாசங்கள், வன்செயல்கள் தொடர்பான நிகழ்வுகள் இடைக்கிடை நடக்கவுள்ளன;

### சனி வக்ர காலத்தில் இலங்கையில் என்ன நடக்கலாம்?

இதே காலத்தில் இலங்கையின் தென் கிழக்கு, மேற்கு பிரதேசங்களில் 10, 12.2002 இல் இருந்து வன் முறைகள் கலவரங்கள் அமையப் பலன்கள் நடக்கவுள்ளன; அவை வன்முறையாளர்களால் தூபமிடப்படும். அரசியல் குழப்பம் மோதல்களும் தோன்றும் அக்கினியால் குடியிருப்புகள் பாதிப்படையும்; சில இடங்களில் மக்கள் இடப்பெயர்வுகள் தோன்றும் நிலைமை ஏற்படவுள்ளது. ரயில் மற்றும் வாகன விபத்துக்கள் அமையும். போக்குவரத்துத் தடைகள் தோன்றி நீங்கும். தெற்கு, வடக்குப் பகுதிகளில்பாதிப்பான நிகழ்வுகள் குறைவாக இருந்துவரும் 1958, 1974, 1977, 1983, 1987, 1989, 1995 ஆம் ஆண்டுகளில் சனீஸ்வர வக்ர காலங்களில் நமது நாட்டில் நடந்தேறிய அழிவு நடடங்களை நாம் திரும்பிப் பார்க்கும் போது, அவை மீண்டும் இந்த வக்ரப் பெயர்ச்சி காலத்தில் தோன்றப் பலன்கள் நடக்குமென்பது சோதிட உண்மையாகும்; உலக நாடுகளில் பலன்கள் எவ்வாறு இருக்கும்?

10. 12. 2002 ஆம் திகதியின் பின்னர் அமையவுள்ள காலத்தில் அமெரிக்கா, ஈராக்கில் போர் தொடுத்து அழிவுகள் ஆரம்பமாகும். பதிலுக்கு ஈராக், ஈராக்கின் நட்பு நாடுகள், அமெரிக்க எதிர்ப்பு சக்திகள் எல்லாம் அமெரிக்காவில் அழிவை ஏற்படுத்தும் செயல்களில் இறங்கும். இதனால் அமெரிக்கா, ஈராக் இஸ்ரவேல் போன்ற நாடுகளில் அளவில்லாத அழிவு நாசங்கள் உண்டாகும். அமெரிக்காவின் தென்கிழக்கு, மேற்குப் பிரதேசங்கள் அழிவைச் சந்திக்க கிரகங்களினால் தாக்கம் அமையவுள்ளது. அமெரிக்காவில் மக்கள் இடம்பெயர்வுகள் தோன்றும். கனடா, ஈராக், குவைத், இங்கிலாந்து, ஈரான் போன்ற தேசங்களில் மக்கள் பாதுகாப்பான இடங்கள் நோக்கி இடம்பெயர்வார்கள். வங்காளதேசம் சீனா, ஒரிசா, அசாம் பிரதேசங்களில் வெள்ளப் பெருக்கால் அழிவுகள் உண்டாகும். தென் அமெரிக்க நாடுகள் பூகம்பம், அரசியல் குழப்பங்களை சந்திக்கும். இலங்கையில் சமாதானச் சூழ்நிலைதொடர்ந்து வரும் பேச்சுவார்த்தை சமாதானத் தீர்வை நோக்கி நகர்ந்து செல்லும். இதில் தாமதங்கள் நிலவி வரும்.

### சில ஆலோசனைகள்

சனீஸ்வர வக்ரப் பெயர்ச்சி காலத்தில் பொதுமக்கள் உல்லாசப் பயணம், கேளிக்கைகள். கொண்டாட்டங்கள் தேவையற்ற பயணங்கள், விமானப் பயணங்கள் போன்றவற்றைத் தவிர்த்து வாழ்வது நல்லது. பொது இடங்களில் மக்கள். எச்சரிக்கையாக இருக்கவேண்டும் கடவுள் சிந்தனையில் செயல்படுவதும் ஆன்மீக விடயங்களில் கவனஞ் செலுத்தி நடப்பதும் மக்களின் வாழ்வில் பாதுகாப்பை உண்டு பண்ணும் எனலாம்;

இந்தியாவில்- நில நடுக்கம் வட இந்தியாவில் சிலசமயம் தோன்றும். கஷ்மீர் இராணுவ முற்றுகைக்கு உள்ளாகி தீவிரவாதிகள் நட்டங்களைச் சந்திக்கப் பலன்கள் அமையும் மதக்கலவரங்கள் அடிக்கடி தோன்றிவரும்.

### சனிவக்ரப் பெயர்ச்சியில் நன்மை பெறவுள்ள ராசிகள்

மேடம், இடபம், மிதுனம், கடகம், துலாம், விருச்சிகம் தனு, கும்பம் போன்ற ராசிகளில் பிறந்தவர்கள் சில சமயம் நன்மைகளையும் அதிஷ்டங்களையும் சந்திக்கவுள்ளனர். மற்ற ராசிகளில் பிறந்தவர்களுக்கு சிலபோது நன்மை தலைகாட்டி பின்னர் நீங்கும்.

## பெயர் விபரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உயர் பட்டப்படிப்புகள் பீடத்தினால் முதுகல்விமாணி பரீட்சையில் தோற்றி தேர்வுசெய்யப்பட்டவர்களின் பெயர் விபரங்கள் இன்று உயர் பட்டப்படிப்புகள பீடத்தினால் வெளியிடப்படவுள்ளன. (பி-7)

## பாட நூல்கள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கல்விக் கோட்டப் பாடசாலைக்கு நேற்று வைத்தீஸ்வராக் கல்லூரியின் உள்ள கோட்டக் கல்வி அலுவலகத்தின் மூலம அடுத்த ஆண்டுக்கான இலவசப்பாடப் புத்தகங்கள்வழங்கப்பட்டன.

இந்த வருடம் பாடசாலைகள் 3ம் தவணைக்காக மூடப்படும் சமயத்தில் பாட நூல்கள் விநியோகிக்கப்படுவதன் மூலம், மாணவர்களின்கற்றல் நடவடிக்கைகளுக்கு இடைஞ்சல் ஏற்படும் நிலை உருவாகவில்லை என்று யாழ். கோட்டக் கல்வி அதிகாரி ஆ. இராசகோபால் தெரிவித்தார்; கோட்டக் கல்வி அலுவலகத்தினூடாக 33, 115 பாட நூல்கள் விநியோகிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (பி-9)

உறுபடையான் செல்இடம் சேரின் உறுபடையான் ஊக்கம் அழிந்துவிடும்.

குறள்

வலம்புரி

## இந்தியாவே தடை

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் நேற்றைய தினம் நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் ஆரம்பமாகியது. இக் கூட்டத்தில் அமெரிக்கா- பிரிட்டன் உட்பட முப்பத்தொன்பது நாடுகள் பங்குபற்றுகின்றன.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் வருடா வருடம் நடைபெறுவது வழக்கமாக இருந்த போதிலும், இம் முறை சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படும் போது நடைபெறுகின்ற கூட்டமாக இது இருப்பதாலும், இக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் பங்குபற்றுவதாலும், கடந்த காலங்களைவிட இம் முறை இடம்பெறும் நிதிக் கூட்டத்திற்கு முக்கியத்துவம் அதிகமாகவுள்ளது.

மூன்று அமர்வுகளாக நடைபெறுகின்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில், யுத்தத்தால் பாதிப்படைந்த வடக்குக் கிழக்குப் புனர்வாழ்வுக்கு நிதி உதவி வழங்குவதே முக்கியத்துவம் உடையதாக விளங்குகின்றபோதிலும் அமெரிக்காவும்- பிரிட்டனும் கலந்து கொள்ளாமல் இருப்பது கூட்டத்தின் கனதியைக் குறைப்பதாகவுள்ளது.

இலங்கை அரசு விடுதலைப் புலிகளை ஏற்றுக்கொண்டு- அவர்களின் போராட்டத்தை நியாயமெனக் கருதி அவர்களோடு சேர்ந்து நிதி உதவி வழங்கும் கூட்டத்தில் பங்குபற்றும் போது அமெரிக்காவும் - பிரிட்டனும் புலிகள் பங்குபற்றும அமர்வில் கலந்து கொள்வதில்லையென எடுத்துக்கொண்ட முடிவு துரதிர்ஷ்டமானதாகும்.

யுத்தம் புரிந்தஇருதரப்பினரும் ஒற்றுமையாகச் செல்லும் போது எதுவித தொடர்புமில்லா தவர் யுத்தம் புரிந்த ஒருதரப்புடன் பகைமைபாராட்டுவது அர்த்தமற்றது மட்டுமல்ல அதற்குப் பின்னால் இருக்கக்கூடிய அழுத்தங்கள், தலையீடுகள் குறித்தும் சிந்திப்பது அவசியமாகிறது.

ஒஸ்லோமாநாட்டில் அமெரிக்காவும் - பிரிட்டனும் ஆர்வத்தோடு பங்குபற்றுவதாக இருந்த போதிலும் இந்தியாவின் தலையீடும், அழுத்தமும், அமெரிக்கா-பிரிட்டன் ஆகிய இரு நாடுகளும் எடுத்துக்கொண்ட முடிவுக்குக் காரணமாகும்.

# வைரஸ் தொற்றினால் ஏற்படும் சளியை

## கட்டுப்படுத்த இயற்கை தரும் மருத்துவம்

### மருத்துவ விளக்கம்

சுவாச உறுப்பின் மேல் பகுதியில் மூக்கிலுள்ள வைரஸ் தொற்றினால் ஏற்படும் அழற்சியே சளி. மற்றநோய்களைவிட, இது அடிக்கடி வருகிறது. ஒவ்வொரு மனிதனும் ஆண்டுக்குசராசரியாக மூன்று முறைகளாவது சளித்தொல்லையினால் அவதிப்படுகிறான் சளிப்பிடித்தால் அது மூன்று முதல் பத்து நாட்கள் வரை நீடிப்பதுண்டு. இதனால் நோயாளிக்கு முதல் மூன்று அல்லது நான்கு நாட்களுக்கு மிகுந்த தொல்லையாகஇருக்கும்.

#### நோயறிகுறிகள்

மூக்குத் துவாரங்களில் அடைப்பும், தொண்டைப் பகுதியில் புண் இருப்பதைப் போன்ற உணர்வும், கரகரப்புமேசளிப் பிடித்திருப்பதற்கான முதல்அடையாளங்களாகும் இது சாதாரணமாகத் தொண்டையிலும் மூக்கிலும் மட்டுமேதொடங்கினாலும், பின்பு உடலின் எல்லாப்பாகங்களையும்பாதிக்கும், சளிப்பிடித்திருப்பதற்கு மூக்கில் ஒழுகுதல், தும்மல் போடுதல், உடல் வெப்ப நிலை உயர்வு, தலைவலி, தொண்டைப்புண் குளிர் நடுக்கம், உடலெங்கும் ஆங்காங்கே வலிகள் தோன்றுதல், பசியின்மைபோன்றவை வழக்கமான அறிகுறிகளாகும்.

#### காரணங்கள்

வைரஸ் தாக்குதலுக்கு ஆளாவதே சளிப்பிடிப்பதற்கு முக்கியகாரணமாகும் சளிப்பிடித்த ஆளின் ஆரோக்கிய நிலை, உடல்பலம் மற்றும் சுற்றுப்புறச் சூழ்நிலைகளைச் சார்ந்து அதனுடைய தீவிரம் இருக்கும். உடல் பலவீனம், மூக்கு, தொண்டை ஒவ்வாமைக் (அலர்ஜிக்) கோளாறுகள் இருத்தல் உடல்வெடவெடப்பு (குளிர் நடுக்கம்) தூக்கமின்மை மனமடிவு, அசதி மற்றும்வெப்பநிலையில் திடீர் மாற்றங்கள் நிகழுதல் தூசி, புழுதி மற்றும் இதர எரிச்சலூட்டும துகள்கள அடங்கிய காற்றைச் சுவாசித்தல்போன்றவையும் சளிப்பிடிப்பதற்கான முக்கியமான காரணங்களாகும்.

சளிப்பிடிப்பதற்கு உண்மையானகாரணம் தவறான உணவுப்பழக்கங்களால் உடலில் நச்சுத்தன்மை சேர்வதேயாகும். ஸ்டார்ச்சு, கார்போஹைட்ரேட்டுகள், புரோட்டீன்கள் மற்றும் இதர அமிலத் தன்மையுள்ள உணவுகளை அளவுக்குமீறி உண்பதால் இப்படிப்பட்ட நச்சுத்தன்மை உடலில் உண்டாகிறது. ஆக சளி என்பது, நமது உடலில் உருவாகிவிட்ட நச்சுக் கழிவுகளை அகற்ற இயற்கை எடுக்கும் எளியநடவடிக்கையேயாகும் இந்தநச்சுக்கழிவுகள் எவ்வளவு அதிகமாக உடலில் சேர்ந்திருக்கின்றன. அவை எவ்வளவு வேகமாக உடலிலிருந்து வெளியேற்றப்படுகின்றன என்பதைப் பொறுத்தே சளி நீடிக்கும் கால அளவு உள்ளது.

#### சிகிச்சை

சளியை சாதாரண ரீதியான மருந்துகளைக் கொண்டு குணப்படுத்த முயல்வது எதிர் காலத்தில் இன்னும் மோசமான கோளாறுகளை வரவேற்க அமைக்கும் வழியாகவே முடியும். இப்படிப்பட்ட சிகிச்சை இதுவரை நடந்துவந்த கழிவகற்றும் பணியை திடீரென்று ஒரு முடிவிற்குக் கொண்டுவந்து, அந்த நச்சுப் பொருட்களை மீண்டும் அவை இருந்த இடத்திற்கே கொண்டுசெல்ல வைக்கின்றன.

சரியான உணவுகளை உண்ணுவதே சளிப்பிடித்தால் செய்யவேண்டிய ஒரேயொரு உண்மையான சிகிச்சையாகும். எலுமிச்சை சாறு கலந்த நீர், தேன், பழச்சாறு, கலந்த வெந்நீர் ஆகியவை தவிர வேறு எதையும் சாப்பிடக் கூடாது. இரத்தத்திலுள்ள அமிலத்தன்மையைச் சமனபடுத்த பழச்சாறு அடங்கிய திரவ உணவை அதிக அளவில் எடுக்க வேண்டியது மிக அவசியம்.

சிறு நீரகங்களைத் தூய்மைபபடுத்துவதற்கு சூடான பானங்கள் தேவைப்படும். அன்னாசிச்சாறு மிக மிகப் பயனுள்ளது. அந்தக் கால கட்டத்தில், குடலைச் சுத்தம் செய்யவெதுவெதுப்பான நீர், எனிமா பயன்படுத்தப்பட வேண்டும்.

இந்தப் பழச்சாறு மட்டும் அருந்துவதை ஒன்றிரண்டு நாளில் முடித்துக் கொண்டு, அதனைத் தொடர்ந்து மூன்று நாட்கள் வெறும் பழஉணவை சாப்பிட வேண்டும். இந்தக் கட்டத்தில் நோயாளி நாளொன்றுக்கு மூன்றுமுறை, புத்தம்புதிய, சாறு நிரம்பிய ஆப்பிள், பியர்ஸ், திராட்சை, ஆரஞ்சு, அன்னாசி, பீச், தண்ணீர் பூசணி அல்லது அந்தப் பருவத்தில் கிடைக்கும் வேறு எந்தப்பழத்தைவேண்டுமானாலும் சாப்பிடலாம்

வாழைப்பழங்களையும், உலர்ந்த அல்லதுவேக வைத்த அல்லது டின்களில் அடைத்த பழங்களையும் உண்ணக் கூடாது. இதற்கு மேல் வேறு எந்த உணவுப் பொருட்களையும் சாப்பிடக் கூடாது; இல்லையேல் சிகிச்சையின் முழுப்பயனும் கிடைக்காமல் போய்விடும். இந்த முழுப் பழஉணவிற்குப்பின் நோயாளி படிப்படியாக பின்வரும்மூன்று அடிப்படை உணவுக் குழுக்களிலிருந்து உணவைத் தேர்ந்தெடுத்து, ஓர் சமச்சீரான உணவினை உண்ணலாம், அவையாவன:

1. வித்துக்கள், கொட்டைகள் மற்றும் தானியங்கள்,
2. காய்கறிகள்,
3. பழங்கள்;

உடலுக்குத் தேவையான எல்லா வகையான விற்றமின்களையும், தாதுப் பொருட்களையும் முழுவதுமாக வழங்கும் உணவைஉண்டுநோயாளி தனது உடலுக்கு உரமூட்ட வேண்டும். இந்தப் பட்டியலிலுள்ளஉணவுச்சத்துக்களில் விற்றமின்- சியே முதலிடம் வகிக்கின்றது. விற்றமின்-சி தொற்று நோய்களுக்கெதிராகச் சளிப் பிடித்தவரைப் பாதுகாத்து ஒருகெடுதலற்றஆண்டிபயாடிக்கைப் (கிருமி-எதிர்ப்பு மருந்தைப்) போல் செயல்படுகிறது. இவ் விற்றமின்கிச்சிலி வகைப் பழங்களிலும்பச்சைக் கீரைகள் மற்றும் காய்கறிகளிலும், முளை கட்டிய கொண்டைக்கடலை மற்றும்பச்சைப் பயறுகளிலும் அதிகமாகக் காணப்படுகிறது;

நோபல் பரிசு வெற்றியாளரான அறிவியல் அறிஞர் டாக்டர் ஆனஸ் ஃபௌலிங் கூறுகிறபடி, இந்த விற்றமினை தினசரி ஒரு குறிப்பிட்ட அளவு ஒழுங்காக உணவில்சேர்த்துக் கொண்டு வந்தால் அதுசளியைத் தடுக்கும்; மேலும் சளி ஏற்கனவே பிடித்திருக்குமானால், இந்த விற்றமின் அதன் தொந்தரவுகளிலிருந்தும் அறிகுறிகளிலிருந்தும் ஆளை விடுவித்து, சளியின் கால அளவைக் குறைக்கவும் செய்யும் என்பதையும் நாம் அறியவேண்டும். தினமும் ஒன்று முதல் இரண்டு கிராம் (1000 மில்லிகிராம் முதல் 2000 மில்லிகிராம் வரை) இந்த விற்றமினை எடுக்க வேண்டியசரியான அளவாகும் என்று அவர் முடிவு செய்துள்ளார். சளியின் முதல் அறிகுறி தோன்றியவுடனே 500 மி.கி அளவுள்ள விற்ற மின்-சி மாத்திரைகளில் ஒன்றிரண்டை விழுங்குவதோடு சிகிச்சைமுடியும் வரை ஒரு மணிக்குஒன்று வீதம் தொடர்ந்து, சாப்பிடுவது நல்லது என்று அவர் அறிவுரை வழங்கியுள்ளார்.

#### நீர்ச்சிகிச்சை

கதவு, சன்னல்களையெல்லாம் மூடிவிட்டுவெளிக்காற்று படாவண்ணம் வெந்நீரில் குளிப்பது மூக்குச் சவ்வுகளிலும், நெஞ்சிலும் கட்டிக் கொண்டிருக்கும் சளியைக் கரைக்க உதவும் என்று பரிந்துரை செய்யப்படுகிறது. சுடுநீர்ப்பைஒற்றடம் கொடுப்பது தலையிலும், நெஞ்சிலும் உள்ள சளியை நீக்கச் சிறந்த சிகிச்சையாகும். நீராவிக் குளியல், பாதகுளியல் மற்றும் சூடான இடுப்புக் குளியல்ஆகியவையும் பயனுள்ளவை. அவை வியர்வையைத்தூண்டி தோலின் மூலம் அகற்றப்பட வேண்டிய கழிவை அகற்றஉதவுவதோடு குடல்களில் நடைபெறும் ஜீரண வேலை ஒழுங்காக நடைபெறவும் செய்கின்றன. வேது பிடித்தல் அல்லது நீராவியை உள்ளிழுத்தல் மூக்கிலுள்ள திசுக்களில் ஏற்பட்டிருக்கும் சளிக்கட்டைநீக்கும். உப்புக் கலந்த வெந்நீரால் வாய் கொப்புளிப்பது தொண்டைப் புண்ணுக்கு நிவாரணமளிக்கும். தினமும் இரண்டு அல்லது மூன்றுமுறை கள் குளிர்ந்த (ஐஸ்) பைகளை நெஞ்சின் மீது வைத்தெடுப்பது நுரையீரல்களில் ஏற்பட்டுள்ள சளிக்கட்டை நீக்கி, அதிகமாகச் சேர்ந்துவிட்ட கோழையைக் குறைக்கவும் துணைபுரியும்.

சளியினால் இலட்சகணக்கான மனித உழைப்பு மணி நேரங்கள் வீணாக இழக்கப்படுகின்றன. இந்தக் கோளாறுக்கு தடுப்புஊசியல் சரியான தீர்வு அல்ல. சரியான உணவுகளை உண்ணுவதன் மூலம் பொது உடல் நலத்தைப்பாதுகாத்து உறுதியூட்டுதல், மிதமான சூரிய ஒளிக்குளியல்செய்தல், புதுக்காற்றை ஆழ்ந்து சுவாசித்தல், சுறுசுறுப்பாக நடத்தல், ஆழ்ந்துஉறங்குதல், அணியும் ஆடைகள் மற்றும் பழக்க வழக்கங்களை காலத்திற் கேற்ப சரிக்கட்டிக்கொள்ளுதல், ஆகியவையே நமக்குச் சிறந்த பாதுகாப்பளிக்கக் கூடியவை. இப்படி இருந்தால் தட்ப வெப்ப நிலையில் எந்த விதமானஏற்றத் தாழ்வுஇருந்தாலும் அது பாதிக்காது.

நன்றி: நல்வழி

---

### தினசரி தியானம்

## நல்லோர் நேசம்

உலகப்பற்றுடைய மக்களின்சீர் கெட்டுள்ளசெயல்களைத் தூய்மைப்படுத்துவதற்கு அறிவாளிகளுடன் ஒரு நொடிபழகுவதே போதும், அந்த காந்த ஒளிவட்டமும ஆன்மீகத்துடிப்பும், அறிவில் முதிர்ந்தவர்களின் சக்தி மிக்க எண்ண அலைகளும் உலகியல் வாழ்க்கையில் ஊறியவர்களது மனதில பெரிய மாற்றத்தைத் தருவனவாகும், நல்லவர் நட்பானது குறுகிய காலத்தில் அறியாமைகள் அனைத்தையும் எரித்துவிடும், அதனால் தான் ஸ்ரீ சங்கரரும், மற்றப் பெரியாரும் தங்கள் நூல்களில் நல்லவர்களோடு நட்புக் கொள்வது பற்றி மிக உயர்வாக எழுதியுள்ளார்கள்.

சுவாமி சிவானந்தர்

---

## ஜப்பான் வர்த்தகக் குழு நேற்று கொழும்பு வந்தது

(கொழும்பு)

ஜப்பானிய வர்த்தக பிரமுகர்கள் 25 பேர் அடங்கிய குழுவொன்று, நான்கு நாள் விஜயம்ஒன்றைமேற்கொண்டு நேற்று கொழும்பு வந்து சேர்ந்துள்ளது.

இலங்கை - ஜப்பான் வர்த்தக ஒத்துழைப்பு அமைப்பின் 13 ஆவது கூட்டத்தொடரிலும் இவர்கள் பங்குபற்றவுள்ளனர்.

ஜப்பானியவர்த்தக முகவர்கள் இங்கு தங்கி இருக்கும் காலத்தில், இருநாடுகளுக்கும் இடையேயானவர்த்தக உறவுகள் குறித்து நாட்டு அதிகாரிகளுடனும், அமைச்சர்களுடனும் கலந்துரையாடல்நடத்தவுள்ளனர். (பி-8)

# மாவீரரின் பெற்றோர்கள் காரைநகரில் கௌரவிப்பு

(காரைநகர்)

பன்னிரண்டு வருடங்களுக்குப் பின்னர் நேற்று மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு காரைநகரில் சிறப்பாக நடைபெற்றது.

காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலையில் தங்கவைக்கப்பட்ட மாவீரர்களின் பெற்றோர்கள், அங்கிருந்து மங்கள இசை முழங்க யாழ்ற்றன் கல்லூரிக்கு அழைத்து வரப்பட்டனர்.

இந் நிகழ்வில் தீவகக் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செம்மணன், காரைநகர் பிரதேச அரசியல் பொறுப்பாளர் மாதுளன் ஆகியோர் ஈகச் சுடரினை ஏற்றி வைத்தனர்.

தமிழீழத் தேசியக் கொடியை வலிமேற்கு சிறப்புப் பொறுப்பாளர் வேந்தன் ஏற்றிவைக்க,யாழ் மாவட்ட மகளிர் அரசியல் பிரிவு பொறுப்பாளர் தமிழ்விழி மாவீரர் நினைவுச் சின்னத்திற்கு மலர் மாலை அணிவித்தார்.

இதனைத் தொடர்ந்து, பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு காரைநகர் வணிகர் கழகத் தலைவர் வே.சிற்சபேசன் தலைமையில் நடைபெற்றது. (இ-246-75)

### அமைச்சர்..

நீதிமன்றங்களையும் அமைத்து வருவதினால் ஏற்படக்கூடிய விளைவுகள் தொடர்பாகவும், முஸ்லிம் மக்கள் இதன் மூலம் ஏற்படக் கூடிய பிரச்சினைகள் தொடர்பாகவும் அன்ரன் பாலசிங்கத்திடம் அவர் எடுத்துக் கூறியுள்ளார். (வ)

### ஆயுதப் போராட...

பாலசிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும தெரிவிக்கையில்,

யுத்தத்தினால் அழிக்கப்பட்ட நகரங்களுக்கும் மற்றும் புனர்வாழ்வு வேலைகளுக்கான நிதி உதவியை நோர்வே வழங்க வேண்டும என்றும் கோரிக்கை விடுத்துள்ளார். (ம)



நேற்றைய சந்திப்பில்.... ரணில் - பாலசிங்கம் கைலாகு கொடுக்கும் காட்சி



நேற்றைய மாவீரர்தின ஆரம்ப விழாவில் தமிழிச்சி ஈகச்சுடர் ஏற்றும் காட்சி.

## கண்ணீர் அஞ்சலி



நேற்று (25.11.2002)
திங்கட்கிழமை அன்று காலமான
**திருமதி**
**மகேஸ்வரி கனகசபை**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.



சந்திரன் பல்பொருள் வாணிபம்
ஆவரங்கால்
புத்தூர்

[C/5358]

## இலங்கைக்கு நிதியுதவி

(ஒஸ்லோ)

ஒஸ்லோவில் நேற்று நடைபெற்ற இலங்கைக்கு நிதியுதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தின் போது நோர்வே 12 மில்லியன் குறோனையும், பிரிட்டன் 8 மில்லியன் பவுண்களையும், டென்மார்க் 17.3 மில்லியன யூரோக்களையும் இலங்கைக்கு வழங்கியுள்ளது. (ம)

### தலைவர்...

வாழ்த்துக்களோடு அகவை 48ல் கால்பதிக்கும் புலிகளின் தலைவர் பிரபாகரன் யாழ்.குடாநாட்டிலுள்ள வடமராட்சி வல்வெட்டித்துறையில் பிறந்தவர்.

உலகின் முதற்தர போராட்டவரராக விளங்கும் இவர் தமிழ் மக்களின் தன்னிகரற்ற தலைவராகவும் போற்றப்படுகின்றார்.

சமாதானக் கனவானாக அகவை 48இல் காலடி எடுத்து வைக்கும் தலைவர் பிரபாகரனுக்கு சமாதானத் தலைவர்கள்,உலகத் தமிழர்கள் மற்றும் விடுதலைப் புலிப் போராளிகள், தளபதிகள் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றனர். (இ)

### மரபுவழி...

ஏற்றிவைத்தார்.

ஈகச் சுடரை சாள்ஸ் அன்ரனியின் தாயார் ஏற்றி வைக்க. மாவீரர்களின் திருவுருவப் படத்திற்கு கேணல் கடாபி மலர் மாலை அணிவித்தார்.

சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் அணிவகுப்பு மரியாதையுடன் மாவீரர்களின் பெற்றோர்கள் விழா மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டனர்.

நிகழ்வில் போராளி காண்டிபன் தலைமையுரை நிகழ்த்த குட்டிச்சிறி மோட்டார் படையணியின் சிறப்புத் தளபதி கேணல் பானு சிறப்புரையினை நிகழ்த்தினார்.

தொடர்ந்து பொது மக்களினால் மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது. (இ)

## ஆண்களிற்கான மாபெரும் சைக்கிள் ஓட்டப் போட்டி

கூட்டுறவுப் பெரியார் வீரசிங்கம் அவர்களின் 37ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபையால் ஆண்களிற்கான சைக்கிள் ஓட்டப்போட்டி ஒன்று 01.12.2002 அன்று நடாத்தப்படவுள்ளது. போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் தங்கள் பகுதி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் அல்லது பனைதென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம், அல்லது சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் அல்லது பொதுமுகாமையாளரின் சிபார்சுடன் மாவட்டச் செயலாளர், யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை, இல 12, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 30.11.2002ற்கு முன்னதாக விண்ணப்பிக்கவும்.

- ❄ போட்டியில் பங்குபற்றும் சைக்கிளிற்கு 'மக்காட்' கழற்றக்கூடாது.
- ❄ போட்டியாளர்கள் 1.12.2002 அதிகாலை 5.30 மணிக்கு (புதிய நேரம்) மானிப்பாய் இந்துக் கல்லூரி முன்றலிற்கு சமுகமளிக்கவும்.
- ❄ சைக்கிள் ஓட்டத்திற்கான பாதை விபரம் போட்டி ஆரம்பிப்பதற்கு 15 நிமிடங்களிற்கு முன் தெரியப்படுத்தப்படும்.

யாழ்ப்பாணம் மாவட்டக்
கூட்டுறவுச் சபை — மாவட்டச் செயலாளர்
தொலைபேசி 2222324

[C/5359]

## TENDER NOTICE
## MINISTRY OF HOUSING AND PLANTATION INFRASTRUCTURE DEPARTMENT OF BUILDINGS

1. The Chairman Tender Board. Department of Buildings, will receive sealed tenders for Construction of Two Storeyed Building for Computer Unit at University of Jaffna upto 10.00 A.M on 12.12.2002.
2. Tender forms are available for purchase with Chief Engineer (Jaffna), Department of buildings, Beach Road, Jaffna upto 3.30 P.M on 09.12.2002 on Payment of non refundable tender fee of Rupees One Thousand (Rs. 1000.00) only. Belated callers will be charged additionally, a late fee of rupees Three Hundred(300.00) only, for each day of delay prior to issue of tender documents.
3. Tenders wiil be opened immediately affter the closing at Contract Branch, Department of Buildings in the Second Floor Sethsiripaya, Battaramulla. Tenders or their authorised representatives are requested to be present at the opening of tenders.
4. Tender forms will be issued only to contractors registered as Building Construction Contractors under the scheme of National Registration and Grading of Construction contractors devoloped by Institute for Construction Training and Devolepment (ICTAD) for Grade M 7 and above having membership of the national Contraction contractors Association of Srilanka (NCCASL). the Contractors Record book and the membership card of the NCCASL must be produced by the applicant before Tender Documents are issued to him.
5. Sealed Tenders may be dispatched eaither by registered post or hand deliverd to the Chairman, Tender Board, Department of Buildings, "Sethsiripaya", Sri jayawardenapura, Kotte, Battaramulla to receive before closing time.
6. Tenderes are advised that no late bids will be accepted and they should enter "sethsitripaya" Premises at least 1 hour before the scheduled time for Tender closing, due to security checking.
7. Tender documents may be inspected free of charge, and any further details could be obtained from Chief Engineer (Jaffna), Department of Buildings, Beach Road, Jaffna.

**A.D .Wickramasinghe**
**Director of Buildings**
**Department of Buildings**
**"Sethsiripaya"**
**sri Jayawardenapura**
**Kotte**
**Battaramulla**

[C/5356]

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகு
## அறிவித்தல்

### பட்டச்சான்றிதழ் வழங்கல்

**கலைமாணி - 1999/2000 (வெளிவாரி)**

**வணிகமாணி - 1999/2000 (வெளிவாரி)**

மேற்படி பட்டக் கற்கை நெறிகளில் சித்தியடைந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரி மாணவர்களுக்கான பட்டச்சான்றிதழ்கள் 19.12.2002 (வியாழக்கிழமை) அன்று மு.ப 9.00 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் வழங்கப்படும்.

மேற்படி பட்டச்சான்றிதழ் கட்டணமாக 200/=ஐ யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையில் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டு வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் 10.12.2002க்கு முன் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

பதிவாளர்
யாழ். பல்கலைக்கழ்கம்,
யாழ்ப்பாணம்


[C/5355]



## சுயமாகத் தொழில் செய்யுங்கள்

வீட்டில் இருந்து குடும்ப அங்கத்தினர் ஒன்று சேர்ந்து மிகக்குறைந்த முதலீட்டில் இயந்திரம் இல்லாமல் செய்யக் கூடிய நல்ல கைத்தொழில் ஸ்கிரீன் பிரிண்டிங். இந்தத் தொழிலை கொழும்பில் பயின்று இன்று உயர்ந்த நிலையில் தொழில் செய்து வருகின்றனர்.

யாழ். நகரில் உள்ள தமிழ் மக்களுக்கும் இந்தக் கலைத் தொழிலை கற்றுக் கொடுக்க தென்தமிழகத்திலிருந்து சு.பரதன் (அச்சுக்கலை நிபுணர்) யாழ். நகருக்கு வருகைதந்துள்ளார். இந்தத் தொழில் பற்றிய முழு விபரம், இதன் பயன் பற்றிய விளக்கம் தேவைப்படுவோர் இலவசமாக நேரில் வந்து சந்தித்து பின்பு பயிற்சியில் சேரலாம். பயிற்சி மூன்று நாள்கள் மட்டுமே. பயிற்சிக்குப் பின்பு தொழில் தொடங்கலாம், சான்றிதழ் வழங்கப்படும். இந்தத் தொழில் செய்வதன் மூலம், பிளாஸ்டிக் பேனா, தகரம், துணிவகைகள், பேனர், பில்புக், நோட்டீஸ், போஸ்ரர், திருமண அழைப்பிதழ், முதலியன பிரிண்டிங் செய்யலாம். இந்த அரிய வாய்ப்பை யாழ். நகரமக்கள் பயன்படுத்திக் கொள்ளவும். பயிற்சியில் வயது வரம்பு தேவையில்லை.



நேரில் தொடர்பு முகவரி:-
**CAREER.COM INSTITUTE**
79, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.தொலைபேசி:- 0777 706334

இறுதிப்பிரிவு 29.11.2002 இல் ஆரம்பம்

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில 26.11.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.